# ஆத்ம ஜோதி



நாகநாத சித்தர்

# ஆத்ம  ஜோதி

[ ஓர் ஆத்மீக மாத வெளியீடு ]

எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே.

— சுத்தானந்தர்

ஜோதி 14 | சுபகிருது ஞு ஆனி மீ 1௳ (15-6-62) | சுடர் 8

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1 | கீதாஞ்சலி | 281 |
| 2 | நாகநாத சித்தர் | 283 |
| 3 | ஸ்ரீ ராமதாஸர் அர்ச்சனை மாலை | 290 |
| 4 | விசயனும் வேட விகிர்தனும் ஆடிய திருவேட்டை | 292 |
| 5 | அன்பும், பண்பும் | 295 |
| 6 | சுவாமி பிரமானந்தர் | 299 |
| 7 | உள்ளத்தில் கொய்த கனிகள் | 307 |
| 8 | வாழ்க்கையின் நோக்கம் | 310 |
| 6 | தத்துவ விசாரணை | 316 |
| 10 | தத்துவமலி | 319 |



### ஆத்மஜோதி சந்தா விபரம்

ஆயுள் சந்தா ரூ. 75-00 வருடச் சந்தா ரூ. 3-00

தனிப்பிரதி சதம் 30.

கௌரவ ஆசிரியர்:- க. இராமச்சந்திரன்
பதிப்பாசிரியர்:- நா. முத்தையா

" ஆத்மஜோதி நிலையம் " நாவலப்பிட்டி. [சிலோன்]




# கீதாஞ்சலி

## 25. ஆழ்ந்த துயில்

களைத்துச் சோர்ந்த கங்குலில், துடித்து
விழித்துனைப் பெரிதாய் எத்தனை விதத்தில்
வழிபட நினைக்கினும், மாறாய் அனைத்தும்
துளியினும் அற்பத் தூசாய் முடியும்!

உடலும் மனமும் ஓய்ந்து தளர்ந்து
கிடக்கும் பொழுதுன் கேண்மைப் பதத்தைத்
துதிக்கத் தொடங்கித் தோல்விப் படாது, உன்
கதியென நம்பிக் கனவற்ற துயிலில்
ஆழ்ந்து கிடந்து, அமையிற் கனிந்த
சாந்தி யருள்க, தண்ணருள் வடிவே!

வெம்பகற் கனலில் வீழ்ந்து துடித்த
அன்பு விழிகள் அமைதி இரவில்
மூழ்கிக் குளித்து முகிழ்க்கும் போது,
கோலப் புத்தொளி கொஞ்சித் தவழ,
புதுநகை முகமும் புத்துயிர்ச் சக்தியும்
இதய மலர்ச்சியும் ஈவதுன் னருளே!

## 26. கனவுக் காதலன்!

அந்தோ, என்துர் அதிர்ஷ்டம்என் னென்பேன்
வந்து, அவன் என்றன் மருங்கமர்ந் திருந்தும்
கண்களால் அவனைக் காணப்பெற் றிலனே!
என்ன உறக்கம்; இழிந்த சவத்துயில்!

ஒள்ளிய கரங்களில் நல்லியாழ் தாங்கி
நள்ளிர வமைதியில் மெள்ளவந் தானவன்!
புல்லியேன் கனவினில் மெல்லிய அவனிசை
தெள்ளமு தாக, என் உள்ளொதி ரொலித்தன!

ஏழையென் இரவுகள் இத்தனை ஏனோ
பாழாய் இப்படிப் பயனற் றொழிந்தன?
என்போற் பாவி எவரிங் குளரே?
கண்ணுறக் கத்தில், என் காதல் ஜோதியாய்
மலரும் நாதனை, மற்றைப் பொழுதில் ஏன்
இழந்து நிற்கிறேன்? யாதுகா ரணமோ?

''பரமஹம்சதாசன்''

# திருவடி மறவா நிலையெனக் கருள்வாய்

(சங்கீதபூஷணம் அ. கி. ஏரம்பமூர்த்தி)

| | | | |
|---|---|---|---|
| இராகம்:- | கரகரப்பிரியா | ஆரோகணம் ஸரிகமபதநிஸ் | 22வது |
| தாளம்:- | ஆதி | அவரோகணம் ஸ்நிதப மகரிஸ | மேளகர்த்தா |

*பல்லவி*

திருவடி மறவா நிலை யெனக் கருள்வாய்
தில்லையிற் றுண்டவம் செய்திடுமையனே

*அநுபல்லவி*

குருவடிவாய் வந்த பெருமானே சிறியேன்
குற்றமெல்லாம் பொறுப்பாய் இத்தரை மீதிலே (திருவடி)

*சரணங்கள்*

1. பொருளெலாம் நின் திருக்காட்சிக் கீடாகுமோ
போகும் நாள் வாழ்க்கையில் மீண்டுதான் வருமோ
அரிய பிறவி தந்தா யருளொளியாய் நிறைந்தாய்
எந்த நிலை வரினும் சிந்தைத் தெளிவுடனே (திருவடி)

2. ஐந்தெழுத்தோது மன்பர் நெஞ்சத்திற் கோயில் கொண்டாய்
அரியயன் கண்டறியா வடிவுடனே திகழ்ந்தாய்
சொந்தம் நீயல்லவோ சோதித்தல் நீதியாமோ
எந்தை நீயே நம்பினேன் எங்கும் நிறைந்தவனே (திருவடி)



# நாகநாத சித்தர்

( ஆசிரியர் )

அறிவார்கள் ரிஷிகள் சித்தர் முனிவோரையா
அரகரா அதுக்குக்கோ ளாரென்றுக்கால்
பொறியாகப் புசுண்டமுனி சொல்வாரையா
போயழைக்கக் கோளற்று வசிஷ்டராகும்
நெறியாக இவ்வகைநா னறிவேனையா
நிலைத்த மொழி புசுண்டரால் மற்றோர் சொல்வார்
புரிவாருமிவ்வளவென் றுரைத்தார் மாயன்
பொருள் ஞானக்கடவுளப்போ மகிழ்ச்சி பூண்பார்.

— காகபுசுண்டர்.

பதினெண் சித்தர்களும் கூடியிருந்த சபையிலே பரமசிவனார் கேள்வி ஒன்றை எழுப்பினர்.

வந்தவாறெவ்வகையே சென்றதேதோ
கேளப்பா ஜெயகாலலயந்தா னெங்கே
குருநமசிவாய மெங்கே நீங்களெங்கே
ஆளப்பா ஐவர்களுமொடுக்கமெங்கே
அறுத் தெனக்கு இன்னவகை யுரைசெய்வீரே.

சிவபிரானரது இக்கேள்வி எல்லாரையும் வாய் மூடி மௌனியாக்கி விட்டது. மார்க்கண்டேயர் எழுந்து புசுண்ட முனிவர் சொல்வார் என மௌனத்தைக் கலைத்தார். அங்ஙனம் பதினெண் சித்தர்களுக்குள்ளே புசுண்ட முனிவருக்குத் தனிப்பட்டதோர் செல்வாக்கும் பெருமையும் இருந்தது. பதினெண் சித்தர்கள் அன்று மாத்திரம் இருக்கவில்லை. இன்றும் அவர்கள் இருப்பதாகப் பல மகான்களுடைய வரலாற்றினின்றும் அறியக் கிடக்கின்றது. குயின்ஸ்பெரி நவநாத சித்தரும், குயில்வத்தை நாகநாத சித்தரும் இதற்குச் சாட்சியாக விளக்கமுறுகின்றனர்.

கற்றனிலிருந்து கொழும்பு செல்லும் றோட்டில் சுமார் நான்கு மைல் தூரத்தில் குயில்வத்தை என்றொரு இடமுண்டு. அது றோசல்லையைச் சேர்ந்தது. அக்குயில்வத்தையில் சிவாலயம் ஒன்றுண்டு. அது தெருவுக்கு அண்மையில் உள்ளது. மலைநாட்டிலுள்ள தோட்டப் பகுதிகளில் எல்லாம் ஸ்ரீ முத்துமாரியம்பாள் ஆலயமே நிறைய உண்டு. அதற்கடுத்தபடியாக முருகன் கோயிலைச் சொல்லலாம். ஆனால் இந்த இடத்தில் மாத்திரம் ஏதோ ஒரு பூர்வீகத் தொடர்பு காரணமாகச் சிவாலயம் அமைந்து விட்டது.

இந்தச் சிவாலயத்தில் மற்ற ஆலயங்களுக்கில்லாத ஒரு பெருஞ் சிறப்பு உண்டு. சாது ஒருவர் பூசகராயமைந்துள்ளானபடியினால் வழிபடும் மக்களுக்கு மூன்று வித நன்மைகள் ஏற்பட இடமுண்டு. கோயில் வழிபாட்டிலேயே குரு வழிபாடும் சத்சங்கமும் கிடைத்து விடுகின்றன. அத்தகைய சாது யாரென்றால் அவர்தான் யோகி குமரகுருபர சுவாமிகள் ஆவார். இவருடைய குருநாதர்தான் தலையங்கத்தில் குறிப்பிட்ட நாகநாத சித்தராவர்.

இவர் திருக்கோஷ்டியூரைச் சேர்ந்த வடகம்பட்டிக் கிராமத்தில் மீனாட்சி அம்பிகைக்கும் இராமகிருஷ்ணபிள்ளைக்கும் குழந்தையாகத் திருவவதாரம் செய்தார். பாரதத்தாய் ஈழத்தின் பொருட் செல்வத்தைப் பெருக்க மக்களை லட்சக்கணக்கில் அனுப்பி வைத்தது போல அருட்செல்வத்தை வளர்க்கவும் சில குழந்தைகளை அனுப்பி வைத்துள்ளாள். அங்ஙனம் வந்த அருட் குழந்தைகளுள் ஒருவர்தான் நாகநாதர் சித்தராவர். கற்றனைச் சேர்ந்த கன்னியப்பூத் தோட்டத்திலே சிலகாலம் ஆசிரியராக அமர்ந்திருந்தார். எண்ணும் எழுத்துங் கற்பித்துக் குழந்தைகளின் இரு கண்களையும் திறந்து வைத்த நாகநாதருக்கு தான் அகக்கண் குருடாக இருக்கலாமா? என்றொரு கேள்வி எழுந்தது. குருடன் குருடனுக்கு வழிகாட்டுவதெப்படி? ஆகவே முதலில் எனது அகக் கண்கள் திறபட வேண்டும் என நினைந்தார். ஆசிரியத் தொழிலை உதறித் தள்ளினார். தன்னைப் பற்றிய விசாரத்தில் இறங்கினார். அமைதியான இடந்தேடி அலைந்தார். இன்று குயில்வத்தையில் சிவாலயமாக உருப்பெற்றிருக்கும் இடத்தில் சாந்தி நிலவக் கண்டார். அவ்விடத்தில் வந்து சாதனைகள் புரிந்தார். அயிலிலுள்ள மக்கள் சாமிகளை அன்பு ஆதரவாகப் பாதுகாத்தனர்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் யோகி குமரகுருபர சுவாமிகள் நாகநாத சித்தருக்குச் சிஷ்யராக வந்து வாய்த்தார். இந்த மாசத்து ஆத்மஜோதி அட்டையின் முகப்பை குருவும் சிஷ்யருமாகவே அலங்கரிக்கின்றார்கள். சீடர் இள வயதினர். உலக வியவகாரம் ஏதுமே அறியாதவர், தம்மை அப்படியே குருநாதரிடம் ஒப்படைத்த பெருமைதான் அவருக்கு உண்டு. அப்பெருமைதான் இன்று அவரைப் பெரிய மகானாக ஆக்கியுள்ளது.

குயில்வத்தைச் சிவாலயம் 1910ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றது. சுவாமிகளே உடனிருந்து நடத்தி வைத்தார்கள். கும்பாபிஷேகம் முடிந்ததும் குருவும் சீடனும் புவாக்பிட்டியா என்ற இடத்திற்கு ஒரு அன்பரைச் சந்திக்கக் கால் நடையாகச் சென்றனர். அங்கு குறிப்பிட்ட அன்பர் இந்தியா சென்று விட்டார் என்று கேள்வியுற்றுத் திரும்பினர். வரும் வழியில் காட்டில் பாதை தவறி விட்டது. இருவருக்கும் சிங்களமோ தெரியாது. ஒரு சிங்கள அன்பர் இவர்கள் கொழும்பு செல்கிறார்கள் என நினைந்து இருவரையும் கைச் சைகையினால் அழைத்துச் தென்று கோமாகம என்ற இடத்தில் விட்டார். அங்கிருந்து கொழும்பு சமீபமாக



உள்ளது என்பதை அறிந்தனர். பக்கத்தில் உள்ள ஒரு புகையிரத ஸ்தானத்திற்குச் சென்று இரண்டு உத்தரவுச் சீட்டுகள் கொழும்புக்கு வாங்கிக் கொண்டு புகையிரதம் ஏறக் காத்து நின்றனர். புகையிரதமும் வந்தது. சனக் கூட்டம் அதிகம். இருவராலும் ஏறிக்கொள்ள முடியவில்லை.

காக்கிச்சட்டை அணிந்த ஒருவர் சுவாமிகள் இப்படி வாருங்கள் என அழைத்தார். அங்குச் சென்று பார்த்தனர். மறியல்காரர் நால்வர் கை விலங்கு கால் விலங்குடன் இருந்தனர். கூப்பிட்டவரோ உடனே கதவைத் திறந்து வாருங்கள் என வரவேற்றார். சுவாமிகள் இருவரும் ஏறப்பின்னிட்டனர். இதைக்கண்ணுற்ற அதிகாரி பயமில்லாமல் ஏறுங்கள் எனத் தைரியம் கூற இருவரும் ஏறி அமர்ந்தனர். எங்கு போகிறீர்கள் என்று அதிகாரி கேட்டபோது கொழும்புக்கு என்று விடை இறுத்தனர். கொழும்புக்கு எவ்விடம் செல்கின்றீர்கள் என்று கேட்டால் அதற்கு மறுமொழி இருவருக்குமே தெரியவில்லை. ஒருவரை ஒருவர் பார்த்து விழித்தனர். உடனே அந்த அதிகாரி இந்தியா செல்கின்றீர்களா என்று கேட்டு தானே அவர்கள் இருவரையும் கொழும்பில் பக்குவமான இடத்தில் சேர்ப்பதாகவும் கூறினார். இருவருக்கும் எங்கு செல்வதென்றே தெரியாது. இருவரும் மௌனம் சாதித்தனர்.

அந்தக் காலத்தில் தூத்துக்குடி கப்பலில் செல்லும் பிரயாணிகள் மருதப்பிள்ளை என்பவரது தேனீர்க் கடையில் தங்கியே செல்வது வழக்கம். அந்த அதிகாரியும் இருவரையும் தேனீர்க்கடையில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு நாளை திரும்பி வருவதாகச் சென்று விட்டார். இருவரிடமும் பணமோ இல்லை. தேனீர்க்கடையில் ஒரு மூலையில் ஆந்தையைப் போல் விழித்துக் கொண்டிருந்தனர். அதிகாரி சாப்பாட்டுக் கடைக்காரரிடம் இரு சுவாமிகளையும் கவனித்துக் கொள் என்று சொன்னபடியினாலே அவர்கள் இவர்களைக் கவனித்து நேரத்துக்குச் சாப்பாடு ஆதியன கொடுத்து உதவினர்.

மறுநாள் அந்த அதிகாரி குறிப்பிட்ட நேரத்திற்கு வந்தார். அதே நேரத்தில் ஆஜானுபாகுவான தோற்றம் உள்ள பெரியகங்காணி ஒருவர் வந்தார். சுவாமிகள் இந்தியாவுக்கா என்று கேட்டார். இவர்கள் ஒன்றுமே பேசவில்லை. உடனே தனது வேலையாளைக் கூப்பிட்டு தூத்துக்குடிக்கு இரண்டு உத்தரவுச் சீட்டு வாங்கிக் கொண்டு வா என்று உத்தரவு போட்டார். உடனே அவன் சென்று இரண்டு உத்தரவுச் சீட்டுகளுடன் வந்தான். சுவாமிகள் இருவரிடமும் சீட்டுகள் சமர்ப்பிக்கப்பட்டன. அந்த அதிகாரி இருவரையும் கப்பலில் ஏற்றி அனுப்பி வைத்தார்.

கையில் செம்புச் சல்லி கூட இல்லாமல் எங்கே போகிறோம் என்ற நினைவே இல்லாமல் இருவரும் மிக அமைதியாகச் சென்றனர். இப்படிப்பட்ட யாத்திரைதான் பரிவ்ராஜக யாத்திரை என்று சொல்லப்படும். சந்நியாசம் பெறுவதற்கு முன்பு இப்படிப் பட்ட யாத்திரை செய்தே

சந்நியாசம் பெறுவது வழக்கம்.

இருவரும் முதன்முதலில் திருப்பரங்குன்றம் சென்றனர். கோயில் முன்னிலையில் கோவண உடையுடனும் கையில் தகரக் கொத்துடனும் தோற்றமளித்த ஒரு சாது மக்களே வாருங்கள்! வாருங்கள் என்று வரவேற்றார். இருவரையும் அழைத்துச் சென்று சுவாமி தரிசனம் செய்வித்தார். அங்குள்ள ஒரு பிராமணக் குடும்பம் இவ்விருவரையும் மத்தியானப் போசனத்திற்கு அழைத்தனர்.

வெகு நாட்களாக அப்பகுதியில் மழையே இல்லை. சரவணப் பொய்கையே வரண்டு விட்டது. மக்கள் தண்ணீருக்காகக் கஷ்டப் பட்டனர் அவ்வூரிலுள்ள மேற்குறிப்பிட்ட பிராமணக்குடும்பம் ஒரு நேர்த்திக்கடன் வைத்தார்கள். நாற்பது அடியார்களுக்கு அன்னமிடுவதாகவும் உடனே மழை பெய்ய வேண்டுமென்பதும்தான் அந்த நேர்த்திக்கடனாகும். இவர்கள் இரு அடியார்களையும் தவிர மற்றவர்கள் எல்லா அடியார்களும் அந்த ஊரவர்களாகும். உணவெல்லாருக்கும் பரிமாறப்படுகின்றது. முருக நாமம் முழங்கிய வண்ணம் இருக்கின்றது. அடியார்கள் யாவரும் பக்தி பரவசமாய் நாமபஜனையிலீடுபட்டுள்ளார்கள்.

திடிரென ஒரு அரோகராச் சத்தம் கேட்டது. ஒரே நிசப்தம். அவ்வீட்டு அந்தணர் இரு புதிய சாதுக்களையும் பார்த்து ஒரு வேண்டுதல் வேண்டுகின்றார். 'சுவாமிகளே! நீங்கள் இருவிரும்தான் இந்த அடியார் கூட்டத்தில் புதியவர்கள். உங்கள் இருவரையும் தவிர மற்றைய எல்லாருக்கும் இந்த அன்னதானத்தின் நோக்கம் தெரியும் மழை பெய்யுமா? என்பதற்கு ஒரு உறுதி கூறியே அடியார்கள் உண்ண வேண்டும்' என்பது தான் அவருடைய வேண்டுகோளாகும். உடனே நாகநாதர் 'இறைவன் திருவுளம் அதுவானால் அவனிச்சைப்படியே நடக்கும்' என்றார். அரோகரா கோஷம் எழுந்தது. அடியார்கள் உண்ணத் தொடங்கினர். வானம் இருண்டது; மின்னியது; முழங்கினது. மழை சோனாமாரியாகப் பொழிந்தது. சாப்பிட்ட அடியார்கள் மழையில் நனைந்து கொண்டேதான் தமது இருப்பிடம் சேர்ந்தனர். சரவணப் பொய்கை தாமரைப் பொய்கையாக மாறிவிட்டது. இவ்விரு சாதுக்களின் மகிமையையும் அறிந்தனர் அவ்வூர் மக்கள். இருவருக்கும் வேண்டிய சௌகரியம் அத்தனையும் செய்து இருவரும் சில நாட்களுக்காவது அவ்வூரில் வசிக்கவேண்டுமென்பதற்காக இரகசியமான காவலும் வைத்தனர்.

பதினெண் சித்தர்கள் அடங்கிய இடம்தான் சிக்கந்தர்மலை. அம்மலையைத் தரிசிக்க இரு சாதுக்களும் சென்றனர். அங்குள்ள கோயிலில் கதிர்காமம் சுவாமிகளுக்குப் பட்டைச்சாதம் இரண்டு என்று புத்தகத்தில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு ஆச்சரியமுற்றனர். இருவருக்கும் அங்கிருக்கும் வரை ஒழுங்காக உணவு கிடைத்தது. காளையார்கோயில் தாசில்தார் நாகநாத சுவாமிகளைக்கூர்ந்து கவனித்தார். சாதுக்களே நீங்கள் உள்ளது



உள்ளபடி பேச வேண்டும். பொய் பேசக்கூடாது. நீர் இராமக்கிருஷ்ண பிள்ளையினுடைய மகன் அல்லவா? நாகநாதர் ஆம் என்றார். தாசில்தாருக்கு ஆனந்தம். உமது தந்தையார் காலமாகி விட்டார். தாயார் உம்மைப் பார்ப்பதற்காக மிக ஆசைப்படுகின்றார். உமது ஏக்சுமாகவே வாழ்கின்றார். ஆதலால் நீர் உடனே சென்று தாயாரைப் பார்க்க வேண்டுமென்று சட்டம் போட்டு விட்டார் தாசில்தார்.

நாகநாதருக்கும் பெற்ற பாசம் இருந்தது. உடனே நேராக வடகம்பட்டி சென்று தாயாரைப் பணிந்தார். தாயும் மகனைக் கட்டித் தழுவி ஆனந்த பாஷ்பம் சொரிந்தாள். நாகநாதர் வருகையால் வடகம்பட்டியில் மழை பொழிந்தது. நீண்ட நாட்கள் வானத்தையே பார்த்திருந்த மக்களுக்குப் பேரானந்தம் பொங்கியது. தாயாரின் ஆசியுடன் இருவரும் கும்பகோணம் சென்றனர். கும்பகோணத்தில் அம்மை நோய் கண்டிருந்தது. அங்கு தினமும் 25, 30 பேர் அம்மையால் இறந்தனர். இவர்கள் இருவரும் இரவு 9 மணியளவில் அங்குச் சென்றனர். ஆதலால் எதையும் அறியார். ஒரு வீட்டுத் திண்ணையில் உட்கார்ந்தனர் அவ்வீட்டில் இருந்து அம்மையால் இறந்த ஒருவரைஅப்போதான் ஈமக்கிரியைக்காகக்கொண்டு சென்றனர் இருவர். இவர்களுக்கு அதுவும் தெரியாது. அவர்கள் இருவரும் வந்த பின் சாதுக்களுக்கு ஊரின் நிலைபரத்தைக் கூறினர். அதோடு இதைத் தடுப்பதற்கு மார்க்கமுங் கேட்டனர்.

உடனே நாகநாதர் அத்தெருவிலுள்ள அனைவரையும் வீட்டுக்கொருவராக அழைப்பித்து எல்லாரும் இப்பொழுதே உங்கள் உங்கள் வீடுகளுக்குச் சென்று சாணியால் வீடு வாசல்கள் எல்லாம் மெழுகி மஞ்சள் தெளித்து வேப்பமிலை வீட்டின் முன்னாலே தொங்கவிட்டு இரா முழுவதும் ஒவ்வொருவர் வீட்டிலும் மாவிளக்கேற்றி தேவியை வழிபாடு செய்யுங்கள் என்று சொன்னார். அம்மக்களும் அவ்வண்ணமே செய்தனர். அடுத்த நாள் விடிந்து பார்க்கும் போது ஊர் பொலிவுற்று விளங்கியது அன்று தொடக்கம் எவராவது அம்மையால் பீடிக்கப்படவில்லை. அவ்வூர் மக்கள் இவ்விருரையும் ஆண்டவனால் அனுப்பப்பட்ட திருத்தூதுதர் எனவே மதித்தனர். ஒவ்வோர் நாளைக்கு ஒவ்வோர் வீட்டில் சாதுக்கள் இருவரையும் அழைத்து உபசரணை மிக அமோகமாக நடந்தது.

பொருள் ஒன்றுமே இல்லாத இரு சாதுக்களுக்கும் இங்கேதான் கஷாய உடையும், தண்டும், கமண்டலமும் இன்னும் சில பொருட்களும் கிடைத்தன. இதுவும் இறைவன் திருவுளமென்று அதனைப் பெற்றுக் கொண்டனர். சிதம்பர தரிசனம் செய்த பின்பு திருவண்ணாமலை சென்றடைந்தனர். அவர்கள் அங்குப் போகும்போது இரவு அகால நேரமாகி விட்டது. இருவரும் சாதுக்கள் சத்திரத்தில் தங்கினர். அதிகாலையில் எழுந்து மற்றைய அடியார்களுடன் இருவரும் கிரிப்பிரதட்சணம் செய்தனர். கிரிப்பிரதட்சணம் 8 மைல் தூரத்தையும் இருவரும் கூப்பியகை எடுக்காமலே அண்ணாமலையானது நினைவோடு சென்றனர். சுவாமி தரி

சனம் ஆனபின் இருவரும் கோயிலின் வாசலுக்கு வந்தனர்.

அவ்விடத்தில் ஒரு சாது சுவாமி தரிசனம் எல்லாம் ஆய் விட்டதா? என்று இவர்களிடம் வினவினர். இவர்கள் ஆம்என்பதற்கடையாளமாகத் தலையசைத்தனர். அண்ணாமலை யாத்திரை பரிபூரணம் அடைய வேண்டுமானல் இங்கிருக்கும் ஒரு சாதுவையும் நீங்கள் தரிசித்தாக வேண்டும். அவரைத் தரிசிக்காமல் சென்றால் நீங்கள் அண்ணாமலை வந்தும் பிரயோசனம் இல்லை என்று கூறினர் சாது.

அந்தச் சாது சொல்லிய குறிப்பின் படியே இருவரும் திருவண்ணாமலையிலுள்ள குகையை நோக்கி நடந்தனர். எதிரே ஒருவர் கௌபீன உடையுடன் வந்து கொண்டிருந்தார். அவர் இவர்கள் இருவரையும் பார்த்து பிராமண சுவாமிகளைப் பார்க்கச் செல்லுகின்றீர்களா? என்று வினவினர். இவர்கள் ஆம் என்பதற்கு அடையாளமாகத் தலை அசைத்தனர். உடனே அவரே இருவரையும் அழைத்துச் சென்று பிராமண சுவாமி இருந்த குகையைக் காட்டினர். பிராமண சுவாமியின் தரிசனமும் கிடைத்தது. இருவரும் நிலந்தோய வீழ்ந்து வணங்கினர். பிராமண சுவாமி இவர்களை ஒருமுறை ஏற இறங்க நோக்கினர். பிராமண சுவாமிகளின் காந்தக் கண்கள் இருவரையும் கவர்வது போலுணர்ந்தனர்.

''முத்தையா உன்னை அங்கு வந்து காணலாம் என்றிருந்தேனேநீயே இங்கு வந்து விட்டாயோ''

என்று பிராமண சுவாமிகள் கூறினர்கள். அதற்குப் பதிலாக நாகநாதரும்

''அண்ணாமலையானைக் கண்டு தொழவல்லோ நாமும் வந்தோம்''

என்று கூறினர். இருவரும் அங்கிருந்து பிரியாமல் பிரிந்தனர். அந்தப் பிராமணச் சுவாமிதான் பிற்காலத்தில் ரமணமகரிஷி என்னும் பெயரால் அழைக்கப்பட்ட மகானவார்.

தென்னிந்திய யாத்திரை முடித்துக்கொண்டு இருவரும் மறுபடியும் இலங்கைக்கே திரும்பினர். குயில்வத்தைசிவாலயத்தில்ஒன்றரைஞ்காலம் தங்கி அங்கு வருவோருக்கெல்லாம் அருளுபதேசங்கள் புரிந்தார்கள். சிவாலயத்தின் முன்றிலிலுள்ள கல்லின்மீதுசுவாமிகள்இருந்துபார்க்கும்போது கீழே புதிய மண் தென்பட்டது. அவ்விடம் காட்டுக் கொடிகளினலும் செடிகளினலும் மறைக்கப் பட்டிருந்தது. இங்கு ஏதோ விசேடம் இருக்க வேண்டும். இது என்ன என்று பார்ப்பாயாக என்றனர். அங்கு ஒருகுகை இருப்பதாகக் கண்டனர். கோயிலின் முன்றிலில் இன்றும் அக்குகை இருப்பதைக் காணலாம்.

இக்குகையிலே நாகநாதர் பல நாட்கள் மோனத்தவம் புரிந்தார்கள். பல காட்சிகள் அவருக்குக் கிடைத்தன. இந்தியாவில் உள்ள ஒரு மலைப்



பகுதியில் ஒரு மகான் நாகநாதரை அழைப்பது போன்றதொருகாட்சி தியானத்தில் தெரிந்தது. அன்றே மறுபடியும் இருவரும் இந்தியா புறப்பட்டனர். தமக்குத்தியானத்தில்கிடைத்த காட்சி எவ்விடமுள்ளதோ என்ற நினைவுடன் சென்றனர். நாகநாதருடைய தமையனர். தற்செயலாகச் சந்தித்தார். புஜண்டகிரிமலை பக்கத்தே இருப்பதாகவும் அதன் பெருமை மிகவும் பெரிது என்றும் சொன்னர்கள். மேலூரைச் சேர்ந்த நரசிங்கம்பட்டியில் உள்ள மலையே புஜண்டகிரியாகும். அம்மலையில் பல சித்தர்கள் வாழ்ந்த குகை ஒன்றுளது. அக்குகையிலேதான் காகபுஜண்டர் வெகு நாள் வாழ்ந்ததாக ஐதீகம். அதனல் தான் அதற்குப் புஜண்டகிரி என்று பெயர் வந்ததாகவும் கூறுகின்றனர்கள்.

நாகநாதருக்குக் காட்சியிலே தென்பட்ட குகையும் மலைக்காட்சியும் இந்த புஜண்கிரியேதான். சில நாட்கள் அங்குத் தங்கித் தவத்தை மேற்கொண்டிருந்தார்கள். இக்குகையிலேதான் அவருக்குத் தவசித்தி ஏற்பட்டது.

மறுபடியும் இலங்கை வந்து தமது உத்தமசீடராகிய யோகி குமரகுரு சுவாமிகளை குயில்வத்தை சிவாலயத்தில் இருக்க வைத்துத் தனியாக இந்தியா சென்று 1946ஆம் ஆண்டு வைகாசி உத்தர நட்சத்திரத்தில் சமாதி நிலை எய்தினர்.

குமரகுரு சுவாமிகள் இன்று குயில்வத்தையில் இருந்து சூழலில் உள்ள மக்களுக்கு மிக ஆறுதலான உபதேசங்களை அருள்வது அவ்விடத்தின் பெருமையேயாகும். குருநாதர் நாகநாத சித்தரைப்பற்றிய செய்திகளையெல்லாம் கண்ணீர் வார பக்தியால் உருகி உருகிச் சொல்வார்கள். அவர்கள் அவர் பெருமையைக் கூறும் போது நா தளதளக்கும். எம்மையும் அறியாமலே கண்ணீர் உகுத்து விடுவோம்.

குமரகுரு சுவாமிகள் பளிங்குபோன்ற மனத்தை உடையவர்கள். அணுவளவேனும் அவர் உள்ளத்தில் அழுக்கைக் காணமுடியாது. அவரது சேவை அளப்பரியது. பூஜை புரியும் போது தம்மையே மறந்துவிடுவார். இராமக்கிருஷ்ணபரமகம்சரது நினைவுதான் வரும், யார் எதைக் கேட்டாலும் சொன்னலும் ஆகட்டும், நல்லதும் என்ற வார்த்தைகளையே சொல்வார்கள். எவராலும் அறிய முடியாத ஞானியாக விளங்கும் அவர் ஒன்றும் அறியாத குழந்தையைப் போலவே இன்று காட்சி கொடுக்கின்றனர்கள்.

''அதர்மத்தில் ஆசைகொள்வது இயற்கை
தர்மத்தில் செல்லுவது பகவானின் கிருபையாகும்''

இந்த உபதேசம் சிவாலயத்தில் அச்சிடப் பெற்றுத் தொங்குகின்றது. இந்த உபதேசம் எத்தனையோ பதிதர்களையெல்லாம் பரம புருஷராக மாற்றியுள்ளது என்று அங்குள்ளார் சொல்லக்கேட்கின்றேம்.

# ஸ்ரீராமதாஸர் அர்ச்சனைமாலை

( க. இ. )

நிவிர்த்தி நாதரொடு ஞானேச்வரரும்
நாம தேவரும் ஏக நாதரும்
சிவாஜி மன்னன் சிந்தையி லமர்ந்த
துக்கா ராமுடன் அவர்துணையான
சமார்த்த ராம தாஸரும் தொடர்ந்தே
பக்தி நெறியைப் பரவச் செய்த பின்
மகிமையுற்ற மஹாராஷ்டிரத்தின்
பாரமார்த்திகம் பாரெங்கும் பரவ
கன்னடஞ் செய்த கனபுண்ணியத்தால்
பக்தியிற் சிறந்த பழங்குடி யதனில்
பூரணையோடு ஹனுமான் ஜயந்தியும்
பொருந்திய நல்ல சுபவேளை தன்னில்
மன்னுயிர் உய்ய வந்துதித்தனை போற்றி !
பழம்பதியான பண்டரிபுரத்தில்
பாங்குற அமர்ந்தே பக்தர்க் கருளும்
வித்தலின் திருப்பெயர் வீறுடன் தாங்கி
உற்றார் உறவினர் உளங்களித்திடவே
பற்பல சாஸ்திரம் பயின்றனை போற்றி !
நாடகக்கலையில் நன்கு தேறி
சமார்த்த ராம தாசரின் சரிதையில்
அப்பெரியா ராக வேடம் தாங்கி
மெத்தவும் சீர்த்தி எய்தினை போற்றி !
இளம் வயசதனில் அச்சிறு அனுபவம்
பசுமரத்தாணி பதித்தாற் போல
பின்னாள் வாழ்வைப் பிரசித்தஞ் செய்ய
முன்னறி குறியாய்ப் பெற்றனை போற்றி !
காசுப் பித்தும் காணிப் பித்தும்
காமப் பித்தும் மலிந்த இக்கலியில்
ஈசப் பித்து உள்ளத்தை வாட்ட
பெற்ற தந்தையாம் பாலக்கிருஷ்ணரையே
உற்ற குருவாய் ஏற்றனை போற்றி !
அன்னார் அருளிய உபதே சத்தை
அல்லும் பகலும் சாதனை செய்தே
அளப்பருஞ் சித்தி எய்தினை போற்றி !
மனக்கூட்டினின்றும் உயிர்க் கிளியானது
கனவிலும் நனவிலும் 'ராமா' எனக்கூவ



எளிய இனிய தாஸனாய் மாறி
எங்கும் அந்த ராமனே கண்டு
எல்லாம் ராமன் செயலென உணர்ந்து
கன்னிமுனை யிருந்து கயிலை வரைக்கும்
புண்ணிய யாத்திரை செய்தனை போற்றி !
அருணாசலத்தில் அப்பன் ரமணரின்
ஆசி பெற்று அருந்தவம் புரிந்து
ஆத்ம தரிசனம் அடைந்தனை போற்றி !
பெற்ற அனுபவம் பிறர்க்கும் பயன்பட
ஆங்கிலந் தன்னில் அருளினை போற்றி !
உன்னையே கதியென் றடைக்கலம் புகுந்த
அன்னை கிருஷ்ண பாயாம் பக்தையின்
ஆர்வந்தீர ஆச்ரமம் அமைத்தே,
அமைதி தேடி வந்தடை அன்பர்க்கு
ஆனந்தம் அளிக்க இசைந்தனை போற்றி !
அவனியின் பற்பல திசைகளி லிருந்து
ஆனந்தாச் சிரமம் வந்து சேரும்
வசதிக ளில்லாப் பக்த கோடிகட்கு
அருளது பாலிக்கத் திருவுளம் கொண்டு
உலக யாத்திரை உவந்தனை போற்றி !
''நன்மையும் செல்வமும் நாளும் நல்குமே
தின்மையும் பாவமும் சிதைந்து தேயுமே
சென்மமும் மரணமும் இன்றித் தேயுமே
இம்மையே ராம வென்றெழுந் திரண்டினால்''
என்ற கம்பன் மணி வாக்குக் கோர்
இணையில் உதாரணம் ஆனாய் போற்றி !
பரந்த இவ்வுலகில் 'பப்பா' என்றால்
பகவா! உனையே குறிக்கும் அன்றோ!
பாரில் பிறர்இப் பட்டம் பெற்றதைக்
கண்டதுமில்லை கேட்டதுமில்லை
இக்கலியுகத்தில் இறைநாம ஜெபமே
இணையில் சாதனையென்றியம்பினை போற்றி !
அப்பனே ஒப்பிலா மணியே போற்றி !
அடியார்க் கமுதம் ஆனாய் போற்றி !
அன்னையும் அப்பனும் ஆனாய் போற்றி !
மருளும் மதியை மாற்றுவாய் போற்றி !
இருளிடர்களையும் இரவியே போற்றி !
நல்லவர் விரும்பும் நட்பே போற்றி !
பொல்லாக் குணங்கள் போக்குவாய் போற்றி !
கருணைக் கிருப்பிடம் ஆனாய் போற்றி !
சச்சிதா னந்த சற்குரு போற்றி !

# விசயனும் வேட விகிர்தனும் ஆடிய திருவேட்டை.

(பண்டிதர் செ. பூபாலபிள்ளை அவர்கள் - மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர்)

— முன் இதழ் தொடர்ச்சி —

வேதமாகிய நாய்கள் ஈறற் பற்றைகளுட் புகுந்து அடிமோந்து, மோந்து முன்னுக்கு ஓடுகின்றன. அத்தருணம் மூகநாமதானவப் பன்றி விசயனைத் தாக்குதற்கு நெருங்கிச் செல்கிறது. வில்வித்தையில் வல்ல விசயன் இதனைக் கண்டதும் கணப்பொழுதிற் காண்டீபத்தை எடுத்து வளைத்துச் சூகரத்தின் முற்பக்கமாகும் முகம் நோக்கி ஒரு கணை விடுத்தான். இதற்கு முன்பு வேடவிகிர்தன் ஏனத்தின் பின்புறம் பிளக்க ஒரு பெருங் கணை தொடுத்தான். இவை இரண்டையுஞ் சூகரம் ஏற்று உடல் பதறி உறுமி மண்மிசை வீழ்ந்து உயிர் துறந்தது. இதனைக் கண்ணுற்ற வேட்டுவத் தலைவன் கடுஞ் சினங் கொண்டு 'ஒருவர் எய்த ஏனத்தை நீ எய்வது வலிமையாகுமா? என விசயனை வினவினன். விசயன் அவனைப் பார்த்துப் புன்னகை புரிந்து 'நான் சருகு மாத்திரம் உண்டு நீரும் அருந்தாது பரமசிவனையும் பார்பதி அம்மையாரையும் நோக்கி அருந்தவம் புரிகிறேன். உனக்கும் உனது பரிவாரங்களுக்கும் இந்தப் பருத்த கொழுத்த பன்றி ஒன்றே உணவுக்குப் போதும். வீரம் பேசுவதை விடுத்து இதனைப் பொசுக்கி வயிறுர உண்டு மகிழுங்கள்' என இகழ்ச்சி மெய்ப்

---

முன் பக்க தொடர்ச்சி

சமரஸம் அருளும் ஜகத்குரு போற்றி !
அழகா போற்றி! அமலா போற்றி !
விமலா போற்றி! வித்தகா போற்றி !
கண்ணே போற்றி! கருத்தே போற்றி !
விண்ணே போற்றி! மணியே போற்றி !
அன்பே போற்றி! ஆர்வமே போற்றி !
இன்பே போற்றி! இனிமையே போற்றி !
ஸ்ரீராம தாஸ குருவே போற்றி !
போற்றி! போற்றி! நின்புன்னகை போற்றி !
போற்றி! போற்றி! நின்பொன்னடி போற்றி !
போற்றி போற்றி நின்பொன்னருள் போற்றி !

[19.4.62 வியாழக்கிழமை வெள்ளவத்தையில் நடந்த சுவாமிகளுடைய ஜெயந்தியின் போது பாடப்பெற்றது.]



பாட்டுடன் கூறினன். இங்ஙனம் இருவருக்குமிடையே பெரும் பூசல் உண்டாயிற்று. இந்தப்பெரும் பூசலின் போதுவிசயனதுவில்லால்எல்லாம் வல்ல இறைவன் திருச்சிரசில் அடியுண்டு மயங்கினன் என்றால் என்னே விசயனின் வீரம்? இந்த வில்லடி பிரகிருதி முற்றுகக் கலந்திருக்கும் இறைவனது திருச் சிரசிற் பட்டமையால் மூவுலகங்களிலும் உள்ள ஜீவராசிகள் அனைத்தினதுஞ் சிரங்களிலும் பட்ட அற்புதந்தான் என்னே! என்னே!! இதனை மகாபாரதத்து வில்லிபுத்தூராழ்வார் அழகுற வருணித்துக் கூறுவதைப் பாருங்கள்.

"விண்ணிலுறை வானவரில் யாரடி
படாதவர் விரிஞ்சனரி யேமுதலினோர்
மண்ணிலுறை மானவரில் யாரடிபடாதவர்
மனுக்கள் முதலோர் களதலக்
கண்ணிலுறை நாகர்களில் யாரடி
படாதவர்கள் கட்செவிமகீ பன்முதலோர்
எண்ணில்பல யோனியிலும் யாரடி
படாதனஇருந் துழிஇருந் துழியரோ"

வேட்டுவத் தலைவனுகும் இறைவன் விசயன் வில்லடியால் ஏற்பட்ட மயக்கம் ஒருவாறு தெளிந்து நரனுடன் மற்போர் புரிகிறான். இத்தருணத்து இறைவன் சீற்றங்கொண்டு அருச்சுனனைத் தனது திருவடியால் எற்றி ஆகாயம் நோக்கி வீசுகிறார். வீசப்பட்ட விசயன் விண்ணுலகம் வரையுஞ் சென்று மண்ணுலகுக்கு மீமுகின்றான். மீமுகின்ற அவன் தன்னுடன் பூசல் புரிந்த வேட்டுவத் தலைவன் தருமவடிவாகிய வெள்ளை எருதேறி பச்சை மயில் பாகராக ஒரு செழுஞ்சுடர்த் திருவடிவுடன் திகழுவதைக் கண்டான். மண்ணுலகை அடைந்த அவன் இந்தத் திவ்வியக் கடவுட் காட்சியினைக் கண்ணாரக் கண்டு தான் புரிந்த அபவாதத்தை எண்ணி எண்ணி அழுதான், தொழுதான். அத்தருணம் அவன் அடைந்த பேருவகை மெய்ப்பாட்டினைப் பாருங்கள்.

"ஆடினன் களித்தனன் அயர்ந்து நின்றனன்
ஓடினன் குதித்தனன் உருகி மாழ்கினன்
பாடினன் பதைத்தனன் பவள மேனியை
நாடினன் நடுங்கினன் நயந்த சிந்தையான்."

இத்தகைய அற்புத மெய்ப்பாடுற்ற அருச்சுனன் இறைவனை மீட்டும் மீட்டும் உற்று நோக்குகின்றான், நோக்கிய அவனுக்குச் சோம, சூரிய, அக்கினியாகிய முக்கண்களும் தோற்றின. குமிழ் சிரிப்புத் தோன்றிற்று, தண்ணொளி பொருந்திய சக்கர வதனந் தோன்றிற்று. திருமுடிக்கோலந் தோற்றிற்று. இந்தந் திவ்விய திருக்கோலத்தை அருச்சுனன் வாயார வாழ்த்துவதைப் பாருங்கள்.

''முக்கணும் நிலவெழு முகிழ்த்த மூரலும்
சக்கர வதனமுந் தயங்கு வேணியும்
மைக்கயல் மரகத வல்லி வாழ்வுறு
செக்கர்மெய் வடிவமும் சிறந்து வாழியே''

தம்மை வாழ்த்தித் தம்மேம்பாட்டுரை கூறுகின்ற வில்லியாகிய விசயனை இறைவன் கடைக்கணித்துக் கட்டித் தழுவி அரவணைக்கின்றான். மனமிக மகிழுகின்றான். அவனுக்குப் பழுதறு மொழி சில கூறித் தேற்றுகின்றான். பொன்னினான் ஆகிய அம்புறாத்தூணியும், வில்லும், மந்திரமும் பாசுபதக்கணையும் பிறவும் அவன் வேண்டியபடி பரிசிலாகக் கொடுத்து மகிழ்விக்கின்றான். தவஞ் செய்வோர் தாம் விரும்புவனவற்றை விரும்பியபடி எய்துவாரன்றோ?

இவை இங்ஙனமாக வானவர்கோன் பரிசில் பெற்ற ஆயிரங் கண்களும் ஆனந்தக் கண்ணீர் சொரிய மகனுக்கு மனம் உருகி வாழ்த்தெடுத்தோதும் 'அழகினைப்' பாருங்கள்.

''நீபுரி தவப்பயன் நீடு வாழியே
சாபமுந் தூணியுஞ் சரமும் வாழியே
தீபமெய் ஒளியுடன் சேர்ந்து போர்செயும்
மாபெரு நீலமெய் வாழி வாழியே''

இக்கூறியவற்றால் அருட்சத்தியாம் பார்பதி தேவியாரது வேண்டுகோட்படி பரமசிவன் அருச்சுனது ஆணவமலத்தை நீக்கியமையும் அசுதத மாயை வடிவாகிவந்த மூகநாமதானவனை அரன் அடியோடு அழித்தமையும், அறம் வெல்லவும், மறம் மடியவும் பாசுபதக்கணை முதலியன அளித்து அருள் புரிந்தமையும், இனிது விளங்குவனவாகும். இவற்றை அடிப்படையாகக் கொண்டே பன்றி வேட்டைத் திருவிழாக்கள் நமது திருக்கோயில்களில் நடைபெறுகின்றன. இத்தகைய சிந்தாந்த உண்மைகளை விளக்குகின்ற வில்லி பாரதமும் திருவிழாக்களும் நமக்கெலாம் ஞானக் கண்கள் போன்றவை. இவற்றைப் போற்றிப் படித்தும் கண்டும் ஞானப் பொருள் உணர்ந்தும் இகபர இன்பங்களை அடைய வேண்டியது சைவ நன் மக்களாகும் நம்மவர் கடன்களாகும்.

★ ★ ★ ★

## கடவுள் உறைவிடம்

தேடிக் கண்டு கொண்டேன்
திருமாலொடு நான்முகனும்
தேடித் தேடொணாத் தேவனை என்னுளே
தேடிக் கண்டு கொண்டேன்.

— திருநாவுக்கரசர்.

ஆவ லன்புடை யார்தம் மனத்தன்றி
மேவ லன், விரைசூழ்துவ ராபதிக்
காவலன், கன்று மேய்த்து விளையாடும்
கோவலன்வரில் கூடிடுகூடலே.

— ஆண்டாள்



# "அன்பும், பண்பும்"

( மரு. பாலகிருஷ்ணன் )

மனிதன் பிறக்கும்போது நல்லவனாகவேதான் பிறக்கிறான். நாளடைவில் அவன் வளர்ந்து உலகத்தை உணரும் போதுதான் அவனுடைய தன்மை மாறுகிறது. இவ்விதம் ஒவ்வொரு மனிதனும் வெவ்வேறு 'துறை'களில் பக்குவப் படுவதுதான் உலகத்தில் மாறுபட்ட கருத்துக்கள் நிலவுவதற்குக் காரணம் எனலாம்.

'பகுத்தறிவு' என்ற ஒன்று மனிதனுக்கு இயற்கையாகவே உண்டு என்பதை மனிதன் தெளிவாகவே தெரிந்து கொண்டிருக்கிறான். என்றாலும், பகுத்தறிவுக்கேற்ற 'நல்ல பண்பை' மனிதன் வகுத்துக் கொள்ள முடிந்தும், முடியாதவனாக இருப்பதால் தான் உலகத்தில் தீமைக்கும் நன்மைக்கும் போராட்டம் ஏற்படுகிறது.

அறிவின் அடிப்படை 'அன்பு' என்பது என் சிற்றறிவால் அறிந்த உண்மை. அன்பால் அனைத்தையும் பெறலாம். அன்பால் நல்ல பண்பைப் பெறலாம். அன்பின் பெருமையை வெளிப்படுத்துவது 'சொற்கள்தான்' சொற்கள் மூலம் ஒருவனுடைய உள்ளத்தை ஓரளவு அறிய முடியும். ஒருவன் பேசுவதிலிருந்து அவனை மற்றவர்கள் எளிதில் எடை போட்டு விடலாம். மனிதனுடைய இதயத்தில் 'இனிமையான சொற்கள்' நிறைந்திருந்தும், 'கடுமையான' சொற்களைக் கூறுகிறான் என்றால் ''பழுத்துச் சுவை தரும் நல்லகனி இருக்கும் போது பழுக்காத காயைப் பறித்துச் சுவைக்கும் பயவற்றவனாகிறான்,'' என்பதை திருவள்ளுவர் மிகத் தெளிவாகவும், அழகாகவும் நமக்கு ,குறள்' மூலம் உணர்த்துகிறார்.

''இனிய உளவாக இன்னாத கூறல்
கனியிருப்பக் காய் கவர்ந்தற்று''

'அன்பு என்றால் என்ன? அது எப்படிப்பட்டது?' என்பதை ஆராயும் போது அன்பால் பிறக்கும் இலட்சியங்களை பலவகைகளாகப் பிரித்துணரலாம். மனத்தின் கண் ஏற்படும் 'இன்ப எழுச்சிதான் அன்பு'! அதுதான் பேரின்பம்! ஆமாம். இவைகள்தான் அன்பின் இலட்சணங்கள்!

குழந்தைகளிடம் காட்டுகின்ற அன்பு 'வாஞ்சை'
இறைவனிடம் காட்டுகின்ற அன்பு 'பக்தி'
பெரியவர்களிடம் காட்டுகின்ற அன்பு 'மரியாதை'
மனைவியிடம் காட்டுகின்ற அன்பு 'காதல்'
பிச்சைக்காரர்களிடம் காட்டுகின்ற அன்பு 'இரக்கம்'
பொருள் மீது காட்டுகின்ற அன்பு 'ஆசை'
ஒழுக்கத்தில் காட்டுகின்ற அன்பு 'தூய்மை'

இன்னும் இப்படி பல வகைகளாக அன்பின் இலட்சணங்களைப் பிரித்துஅறிய முடியும். அன்பால் பிறப்பதே 'பண்பு' எனப்படும். அன்பும்; பண்பும் அறிவின் 'பேரொளிகள்!' பண்பு!

மனிதன் எண்ணுவதைச் செயலாக்குவதில் ஆர்வமடைகிறான். அதிலும், தன்னலத்தோடு செய்யும் செயல்களில் பிறருக்குத் 'தீமை' நேர்ந்தாலும் எதையும் துணிந்து செய்யும் ஆற்றலைப் பெறுகிறான்.! அதனால் ஏற்படும் ஆறுதலில் இன்பம் எய்துகிறான்! இப்படிப்பட்ட ஆசைக்கும் அமைதிக்கும்செய்துவிட்ட அக்கிரமத்தால் பிறகு எண்ணற்ற பழிகளுக்கும் பாவங்களுக்கும் ஆளாகி வருந்துகின்றவர்கள் ஏராளம்!

நல்ல எண்ணங்களையும் சிறந்த சொல்லையும் பயன்படுத்திச் செயலாக்குவதைத் தவிர மேலான ஒரு 'பண்பு' இருப்பதாகத் தெரியவில்லை. அன்பால், அறிவால் ஏற்படும் 'பண்பை' சொல்லால். செயலால் நிறைவேற்றும் போது, எத்தனை இன்பங்கள், இதயத்தை மகிழ்விக்கின்றன.

மனிதன் இன்பமாக வாழ வேண்டுமென்ற ஆசையை விரும்பும் போது, பிறருக்கு உதவி செய்தல், இனியவை கூறல், இன்னா செய்யாதிருத்தல் இவைகளே அவனுக்கு இம்மையிலும், மறுமையிலும் பேரின்பம் பயக்கும்! 'தீமை செய்தவனை நீ பகைக்காமல் அவனுக்கு நன்மையே செய். உன்னுடைய நன்மையிலிருந்து தீமை செய்தவன் வெட்கப்படும் அளவுக்கு நீ நல்லதைச் செய்தால் அதுவே உனக்கு அறமும் ஆகும், தீயவன் திருந்தியும் வாழ்வான்' என்ற நம்பிக்கையை திருவள்ளுவர் நமக்கு குறளிலே தெளிவுபடுத்துகிறார்.

''இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்து விடல்''

நானும், என் நண்பரான கவிஞர் ஒருவரும் ஒருமுறை திருப்பராய்த்துறை சென்றிருந்த போது சந்தித்தோம். நாங்கள் சந்தித்தவர்களில் 'சங்கீத ஆசிரியர்' என்பவரும் ஒருவர். மிக மிக நல்லவர். அவர் நல்லவராக இருந்தும், தன்னைத் 'தீய'வராக நினைத்து எங்களைச் சந்தித்தபோது கூறினார். எங்கள் மீது அவருக்கிருந்த அன்பு வேட்கையே இதற்குக் காரணம் எனலாம். ஆமாம் அதனால் தான் எப்படியோ அவர் தன்னை 'தீயவன்' என்றார்.

என் நண்பரை அந்த சங்கீத ஆசிரியர் கண்டபோது, எல்லையற்ற ஆனந்தத்தோடு பேசினார். ''உங்கள் கவிதைகள் நன்றாக இருக்கின்றன' மாணவர்களுக்கு உங்கள் கவிதைகளைத்தான் சொல்லிக் கொடுத்து வருகிறேன். அருமையாகப் பாடுகிறார்கள்' என்றார் சங்கீத ஆசிரியர்.

மலர்ந்த முகத்தோடு சங்கீத ஆசிரியரை நோக்கி ''மகிழ்ச்சி'' என்றார் நண்பர். அப்போது சங்கீத ஆசிரியர் எதைப் பேச வேண்டுமென்ற



சொற்களே அகப்படாமல் அன்புப் பெருக்கால் ''கீழான இந்த ஜென்மம் உங்களைப் பார்த்ததும் ஆறுதலடைந்தது'' என்றார்.

'' இல்லை, அப்படிப்பட்ட பாக்கியத்தை உங்களைக் கண்டதும் நான்தான் அடைந்தேன் என்றார் என் நண்பர்.

''கிடையாது, உங்கள் போன்ற நல்லவர்களை இந்தத் 'தீயமனம்' சந்தித்து விடுகிறது. நல்லவர்களை கண்டாலே தீய மனமும் நல்ல மனமாக ஆய்விடுகிறது'' என்றார் சங்கீத ஆசிரியர்.

சங்கீத ஆசிரியர் என் நண்பரிடம் இப்படிச் சொன்னபோது அந்தச் சொல் என்னுடைய மனத்திலே பதிந்தது. ஆமாம், தீயமனம் படைத்தவன் நல்வர்களைக் கண்டாலேயே நல்ல மனத்தோடுதான் பழகுகிறான், பேசுகிறான். நல்லவர்களை விட்டுப் பிரிந்ததும். தீயவனின் மனம் தீமையின் எல்லையைத்தான் அடைகிறது. சங்கீத ஆசிரியர் மிகமிக நல்லவராயிருந்தும், என் நண்பரான கவிஞர் முன் தன்னை 'அற்ப மனிதனாகவே கொண்டார். அடக்க உணர்ச்சி நிரம்பிவிட்ட காரணத்தால்தான் தீயவனின் மன நிலையை ஒப்பிட்டு தன்னை அவ்வளவு அடக்கத்தோடு கூறிக் கொண்டார் போலும்;

சங்கீதத்தின் இனிமை போன்று பேசுகின்ற சங்கீத ஆசிரியரின் இந்தச் சொல் நடைமுறைச் சொல்லாகவேதான் எனக்குத் தெரிந்தது. என்றாலும். இச்சொல்லை சிந்தித்துப் பார்க்கும் போது தீயவனின் மனநிலையை நாம் எந்த அளவுக்கு அறிகிறோம் என்பது புலனாகும். ''நல்லவர்களைக் கண்டாலே தீயமனமும் நல்ல மனமாக ஆகிவிடுகிறது'' இதை நினைக்கும் போது எவ்வளவு ஆழ்ந்த பொருள் இருக்கிறது. 'தீயவன் கூட நல்லவனைப்பற்றி அறிகிறான். நல்லதைப்பற்றித் தெரிந்து கொள்கிறான். நல்ல தன்மையை தீயவன் புரிந்துகொண்டேதான் தீமையைச் செய்கிறான்' அதனால்தான் 'நல்லவர்களைக் கூட தீயவன் அறிகிறான்' என்பதைச் சுட்டிக் காட்டினார் போலும்!

சிலர் தீமையை இளமைக் காலத்தில் செய்து விட்டு, முதுமைக் காலத்தில் தன்னை உணரும் சக்தியைப் பெறுகிறார்கள். ஆனால் அவர்களுக்கு உலகம் வழங்கும் 'பட்டம்' இப்படித்தான் இருக்கும்.

இளமையில் தீமையைச் செய்து, தவறான வழிகளில் எவனொருவன் செயல்படுகிறானோ, அவன் பின் காலத்தில் தன்னை உணர்ந்து எவ்வளவு நன்மைகளைச் செய்தாலும், ஒழுக்கத்தோடு வாழ்ந்தாலும் அவன் 'தவறானவன்' என்ற பழியைத்தான் பெறுவான். தெள்ளறிவோடு கண்ணியமாக வாழ்ந்தாலும் 'புல்லறிவாளன்' என்பதைத் தவிர, வேறு எதையும் அவன் பெறுவதற்கில்லை. இதே போல்—

சிலர் இளமைக் காலத்தில் தீமையைக் கருதாமல், ஒழுக்கமாக வாழ்ந்து பின் காலத்தில் தனக்குத் தெரிந்தும் தீமையைச் செய்தாலும் உலகம் அவனை தீயவனாக விரைவில் கருதி விடாது.

இவ்விரண்டு கருத்துக்களும் உலக அனுபவத்தில் உண்டென்றாலும், இளமைக் காலத்திலிருந்து இறுதிக்காலம் வரை ஓரளவு தீமைக்கு ஆளாகாமல் இருப்பவனே சிறந்த பண்பாளன், அவன் தான் அறிவாளியும் ஆவான்.

தீமை செய்யாமல் எந்த மனிதனும் வாழ்ந்திருக்க முடியாது. இனிமேல் அப்படி மனிதன் வாழ்வதற்கும் இல்லை. என்றாலும், 'நெஞ்சாரப் பிழை செய்வதே பெரும் தவறு என்பதே சான்றோர்களின் கருத்து அதனால்தான் திருவள்ளுவர் தீயவர்களை இப்படிச் சொல்லி, நல்லவர்களை உயர்ந்தோர் என்று கூறுகிறார்.

''தீவினையார் அஞ்சார் விழுமியார் அஞ்சுவர்
தீவினை என்னுஞ் செருக்கு''

## ஆத்மஜோதி

### ஆயுள் சந்தா ஆதரவாளர்

| | | |
|---|---|---|
| திரு. S P. சதாசிவம் பிள்ளை | — | கினிகத்தேனை. |
| திருமதி. A. மகேஸ்வரன் | — | யாழ்ப்பாணம். |
| திரு. R. S. பழனியாண்டி பிள்ளை | — | நாவலப்பிட்டி. |



# சுவாமி பிரமானந்தர்

(திரு. மா. மகாதேவா B. A.)

— முன் இதழ்த் தொடர்ச்சி —

வாடிய முகத்துடன் காணப்பட்டார். ஒருநாள் இருக்கல் காரணம்கேட்டார் பகவான். ஒரு முறையும் பிழை செய்யாமல்நடப்பதையும், ஆனால் ஒருமுறை குற்றம் செய்துவிட்டது போன்றஉணர்வுவந்ததையும், 'விளையாட்டுக்குப்பொய்சொன்னதே' அக்குற்றமென்பதையும் தெரிவித்தார். விளையாட்டாயினும் பொய் சொல்லாதே'' என்று ஸ்ரீ இராமகிருஷ்ணர் மிகவும் தண்டித்தார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் தமது சீடர்களை எந்த நேரத்திலும் கண்காணிப்பார். ஒருநாட் காளிகோயிலின் முன்னிலையில் இருக்கல் தியானத்திலிருந்தபோது ஸ்ரீ இராமகிஷ்ணர் வந்து அவதானித்தார். ஆனந்த தியானத்திருந்த சீடரைப் பார்த்து ''இதுதான் நீ ஜெபிக்க வேண்டிய மந்திரம், இது தான் உன் இஷ்டதெய்வம்'' என்று மந்திர உபதேசம் செய்தார். இருக்கல் தனது இஷ்டதெய்வத்தை தரிசித்தார். அன்றுமுதல் நெடுநேரம் தியானம் செய்வார். இரது பகல் ஓயாமல் தனது மந்திரத்தைச் ஜெபித்தபடியே இருப்பார் எந்நேரமும் இருக்கலின் உதடுகள் அசைந்தப்படியே இருக்கும். இந்நிலைகண்டு ஸ்ரீ இராமகிருஷ்ணர் சமாதியடைவார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் பல சாதனைகளைப் பழக்கினார். இருக்கல் தான் ஒரு சாதகன் என்று வெளியே காட்டாமல் ஒருவருக்கும் தெரியாமற் சாதனை செய்வார். தெய்வீக வாழ்விலும் ஏற்றத்தாழ்வுண்டு, ஒருநாள் காளிகோயிலிலே தியானத்திற்கு அமர்ந்தபொழுது தன் மனதை ஒருமுகப்படுத்த இயலாமற் போயிற்று, முயற்சி வீணாயிற்று, சோகமடைந்தார், மிக வருத்தப்பட்டார், அந்நேரத்தில் அவ்விடத்திற்கு எதிர்பாராவிதமாக ஸ்ரீ இராமகிருஷ்ணர் வந்தார். இருக்கலை நோக்கி ''இவ்வளவு கூடிய சீக்கிரத்தில் உனது இருப்பிடத்தை விட்டகன்றது ஏன்?'' என வினவினார். இருக்கல் உள்ளதை உள்ளவாறு உரைத்தார். ஸ்ரீ இராமகிருஷ்ணர் ஆனந்த சிந்தனையில் இருக்கலை நோக்கினார். வாயை திறக்கச் செய்தார். ஏதோ சொல்லி அவர்நாவில் ஏதோ எழுதினார். இருக்

கலின் துன்பமும் சோகமும் நீங்கின. பரவச கதியடைந்தமை கண்டு ஸ்ரீ இராமகிருஷ்ணர் மகிழ்ந்தார். சீடனை மீண்டும் தியானத்தில் இருக்கச் சொன்னார். அன்று தொட்டு இருக்கலின் இடையூறுகள் நீங்கின.

இடையில் இருக்கலின் உடல்நிலை பாதிக்கப்படது. இந்நிலையிலே ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய சீடரான பலராம்போஸ் பிருந்தாவனத்திற்குப் புறப்பட்டார், இவருடன் சென்றார். பிருந்தாவனத்தில் இருக்கலின் உடல்நிலை கேவலமடைந்தது. இதையறிந்த ஸ்ரீ இராமகிருஷ்ணர் இருக்கலை காண மிகவும் ஆவல் கொண்டார்.

ஸ்ரீ இராமகிருஷ்ணர் அன்னையின் மூலம் 'இருக்கல் முற்பிறப்பிற் கிருஷ்ணருடைய தோழன் எனவும், இருக்கல் தனதுடலை விட்டு விலகிக் கிருஷ்ணருடன் இரண்டறக் கலப்பார் எனவும் முன்னொருநாள் அறிந்தார். பயமடைந்தார். அன்னையை வேண்டினார் பகவான். வேண்டியவாறு பயன் கிடைத்தது.

ஸ்ரீ இராம கிருஷ்ணருடைய சீடர்களிற் பலர் இருக்கலின் நண்பர்கள். இருக்கல், நீண்டகாலம் பகவானுடைய உறவை அனுபவிக்க முடியவில்லை. புற்றுநோய் ஸ்ரீஇராம கிருஷ்ணரை வருத்தியது. ஸ்ரீ இராம கிருஷ்ணர் சாமாபுக்கூருக்குக் கொண்டு செல்லப்பட்டுப் பின் கல்கத்தாவிற்கு எடுத்துச் செல்லப் பட்டார். ஈற்றிற் காசிப்பூரில் ஒரு வீட்டில் வைத்திருந்தார்கள். நரேந்திரரின் தலைமையில் இருக்கலும் மற்றச் சீடர்களும் குருவைக் கண்காணித்தனர். குரு சேவையிலும், தெய்வீக சாதனையிலும் காலம் கழிந்தது.

இருக்கல் அமைதியும் ஒழுக்கமும் உள்ளவர். ஒருநாள் ஸ்ரீ இராம கிருஷ்ணர் நரேந்திரரிடம் 'இருக்கலுக்கு ஒரு பெரும் இராச்சியத்தை நிர்வகிக்கக் கூடிய போதிய அறிவும் ஆற்றலும் உள்ளது' என அந்தரங்கமாகத் தெரிவித்தார். குரு கூறிய உண்மையை நரேந்திரர் உடனே விளங்கிக் கொண்டார். ஸ்ரீ இராம கிருஷ்ணருடைய சீடர்கள் இருக்கலுக்குப் பெரும் மதிப்புக் கொடுத்தனர். ஒருமுறை நரேந்திரர் இருக்கலை 'இராசா' என அழைப்போம் என்று மற்றப் பக்தர்களுக்கும் சொன்னார். எல்லோரும் உடன்பட்டனர். ஸ்ரீ இராம கிருஷ்ணர் இதையறிந்த போது இருக்கலுக்கு இது தகுந்த பெயர் என மகிழ்ந்தார்.



சீடர்கள் எல்லோரும் ஸ்ரீ இராமகிருஷ்ணர் விரைவிற் குணமடைவார் என நினைத்தனர். ஆனால் அவரது நிலை கெடுதியாயிருந்தது. ஒருநாள் இருக்கல் ஸ்ரீ இராம கிருஷ்ணரை நோக்கி உங்கள் உடல் நலத்தையிட்டுத் தேவி அன்னையை வேண்டுக என்றார். ஆண்டவன் சித்தம். ஸ்ரீ இராம கிருஷ்ணரால் இறுதி நேரம் தேவியை வேண்டயியலவில்லை. 1886 ஆம் ஆண்டு ஆவணித் திங்கள் பதினாறும் நாள் ஸ்ரீ இராமகிருஷ்ணர் மகா சமாதியடைந்தார்.

இதன்பின் இருக்கல் பாறநகூர் அடைந்து சந்நியாசத்தை மேற்கொண்டார். இவருக்குக் கொடுக்கப்பட்ட பெயர் சுவாமி பிரமானந்தர் என்பதாகும்.

பாறநகூர் ஆச்சிரமத்திற் சுவாமி பிரமானந்தரும் மற்றவர்களும் கடும் தவத்தி லீடுபட்டனர். உணவின்றி உறக்கமின்றித் தமது நாட்கள் முழுவதையும் கடும் சாதனையில் ஈடுபடுத்தினர். தமது வாழ்க்கையை ஆண்டவனையடையத் தியாகம் செய்யத் தயராயிருந்தனர். சுவாமி பிரமானந்தரும் மற்றவர்களும் பல புண்ணிய தலங்களுக்கும் சென்று தவம் புரிய ஆவல் கொண்டனர். சுவாமி பிரமானந்தர் பூரிக்குச் சென்றார். பிச்சை ஏற்றுத் தவம் புரிந்தார். ஸ்ரீ இராம கிருஷ்ண பக்தர்கள் சுவாமி பிரமானந்தர் இவ்வளவு கடினமான தவ வாழ்வை மேற்கொள்வார் என்று எதிர்பார்க்க வில்லை. ஸ்ரீ இராமகிருஷ்ணருடைய இல்லறச் சீடர் பலராம் போஸ் சுவாமி பிரமானந்தருடைய கடின வாழ்வை அறிந்தார். பூரியில் தனது வீட்டில் வந்து தங்குமாறு பிரமானந்தரை வற்புறுத்தினார். பூரி தனக்குச் சுதந்தர மளிக்கமாட்டாதென எண்ணி மீண்டும் பாறநகூர் ஆச்சிரமத்தை அடைந்தார்.

வட இந்தியாவிற்குச் சென்று தவம் புரிய வேண்டுமென்ற ஆவல் எழுந்தது. சுவாமி விவேகானந்தர் இவரைத் தனியே விட மனமில்லாமற் சுவாமி சுபோதானந்தாவை இவருக்குத் துணையாக அனுப்பினார். சுவாமி பிரமானந்தர் காசிக்குச் சென்று பின் 'ஓம்கரநாத்' என்னும் தலத்தில் தங்கினார். ஆறு நாட்கள் ஓம்கரநாத்திற் சமாதி நிலையில் இருந்தார். இதன் பின் பஞ்சவடி, துவாரகை, போர்பந்தர், கின்நகர், ஆஜ்மீர் ஆகிய தலங்களைத் தரிசித்துப் பிருந்தாவனம் வந்தடைந்தார். பலர் இவரைக் கண்டு வியந்தனர். சேவை செய்ய ஆவலோடு முன் வந்தனர் பலர். ஆனாற் சுவாமி எவருடைய சேவையையும் விரும்பவில்லை.

இரண்டாம் முறை பிருந்தாவனத்திற்கு வந்தபோது மீண்டும் கடுந் தவத்தில் ஆழ்ந்தார். நாள் முழுவதும் தவ நிலை. அருகிற் சுவாமி சுபோதானந்தா. ஆனாலும் வாய்ப் பேச்சில்லை. உணவு அவரைத் தேடி வரும். சில நேரம் உண்பார். சிறிதளவுதான். சில நேரம் உண்ண மாட்டார்.

'ஸ்ரீ இராம கிருஷ்ணர் தந்த செல்வத்தை நிலையுள்ளதாகச் செய்ய வேண்டும்' என்று ஒரு பக்தருக்கு விடையளித்தார். சுவாமி சுபோதானந்தா இவரைப் பிரிந்தார். தனிமையிலே தவம் செய்தார். சுவாமி பிரமானந்தர் இங்கிருக்கும் போது சுவாமி விவேகானந்தர் சுவாமி துரியானந்தர் ஆகியோர் வந்தனர். சுவாமி துரியானந்தரை இவருடன் விட்டுத் தனது பிரயாணத்தைத் தொடர்ந்தார் சுவாமி விவேகானந்தர்.

சுவாமி பிரமானந்தரும் சுவாமி துரியானந்தரும் ஆழ்ந்த தவத்தி லீடுபட்டனர். இவர்கள் உணவு தேடுவதில்லை. ஆனால் உணவு இவர்கள் முன்னால் வைக்கப்பட்டிருக்கும். இவர்கள்பிருந்தாவனத்தில் இருந்தபோதுதான் சுவாமி விவேகானந்தருடைய வெற்றி முரசு அமெரிக்காவிலிருந்து அகிலம் முழுவதிலும் ஒலித்தது. அலம்பசர் ஆச்சிரமத்திற்குச் செல்லும்படி சுவாமி விவேகானந்தர் வற்புறுத்தினார். முதலிற் சுவாமி துரியானந்தர் வந்தார். பிரமானந்தர் 1894ல் வந்தார். இவர் திரும்பியமையைக் கண்ட உடன் சீடர்களுக்குப் புத்துயிர் வந்தது போல் இருந்தது. ஸ்ரீ இராம கிருஷ்ணருடைய உபதேசங்கள் உலகம் முழுவதும் பரவுவதைக் கண்டு மகிழ்வடைந்தார். 'உங்கள் வாழ்க்கை, உங்கள் மடம், வாழ்க்கையில் இன்னலுற்றவர்களுக்கு ஆறுதலைக் கொடுக்கும்; உங்கள் வாழ்வை அவ்வாறே அமைக்குக என்று தனது சகோதரச் சீடர்களுக்குக் கூறினார். ஸ்ரீ இராம கிருஷ்ண மடத்திற்கு உறுதி கொடுத்தவர் சுவாமி பிரமானந்தாவே.

சுவாமி விவேகானந்தா இரு வருடங்கள் சென்றபின் இந்தியாவிற்கு வந்தார். தொண்டுக்காகத் திரட்டின பணம் முழுவதையும் சுவாமி பிரமானந்தரிடம் கொடுத்தார். இராம கிருஷ்ண மடம் [Mission] தொடங்கிய போது சுவாமி பிரமானந்தரைத் தலைவராக்கிச் சுவாமி விவேகானந்தா பொதுத்தலைவரானார். சுவாமி பிரமானந்தர் தன் இறுதிக் காலம் வரை தலைவராகவே இருந்தார்.



சுவாமி விவேகானந்தருக்கும், சுவாமி பிரமானந்தருக்கும் இடையே நல்லுறவு நிலவியது. இருவரையும் ஸ்ரீஇராம கிருஷ்ணர் 'நித்திய சத்தர்கள்' என்று கூறுவார். சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவிலிருந்து திரும்பிய பொழுது சுவாமி பிரமானந்தருடைய பாதங்களை வணங்கிக் 'குருவினுடைய மகனைக் குருவெனவே கருத வேண்டும்' எனப் புகழ்ந்தார். சுவாமி பிரமானந்தரும் சுவாமி விவேகானந்தரை வணங்கித் 'தந்தைக்குரிய மரியாதை தமையனுக்குரியது' என அவர் பாதங்களில் வீழ்ந்தார்.

ஒருமுறை மேல்நாட்டுச் சீடரொருவர் சுவாமி விவேகானந்தரைப் பல கேள்விகள் கேட்டார், சுவாமி விவேகானந்தர் சுவாமி பிரமானந்தரைச் சுட்டிக் காட்டி 'அதோ ஒரு தெய்வீக மின்சார நிலையம் உள்ளது; அங்கே சென்றால் உமது சந்தேகங்களெல்லாம் தெளியும்' என்றார்.

சுவாமி விவேகானந்தர் 1902ல் மகா சமாதி அடைந்தார். இராம கிருஷ்ண மிஷனின் பொறுப்பு யாவும் சுவாமி பிரமானந்தரிலே தங்கியது. இந்தியாவிற் பல இடங்களிலே சுவாமி பிரமானந்தர் கிளைகளை நிறுவினார். காசி, கான்கல் பிருந்தாவனம், விந்தியாசல் ஆகிய இடங்களுக்கும், 1906ல் பூரிக்கும் 1908ல் தென் இந்தியாவிற்கும் சென்றார். சென்னையில் அவர் சாதி மத பேதமின்றி எல்லாரையும் வரவேற்றார். சென்னையிலிருக்கும் போது இராமேஸ்வரம், மதுரை ஆகிய புண்ணிய தலங்களைத் தரிசித்தார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலுள்ளே சென்றபோது மெய் சிலிர்த்துத் தன்னை மறந்தார். இவருடன் சென்றவர்கள் இவரை அந்நேரம் பிடித்திராவிட்டால் விழுந்திருப்பார்.

சுவாமி பிரமானந்தர் பல தொழில்களிலும் வல்லவராக நல்லவராக விளங்கினார். கட்டிடங்களை மேற்பார்வையிடுவார். பூந்தோட்டங்களை அமைப்பார். மடங்களை நிறுவுவார். சீடர்களுக்கு உபதேசிப்பார். ஆலோசனை கேட்போருக்கு ஆலோசனை அளிப்பார்.

இவர் இராமகிருஷ்ண மடத்தின் தலைமைப் பொறுப்பையேற்று இருந்தபோது 'பல சீடர்களை ஏற்றுக்கொள்கிறார் இல்லை' என்று சாரதாவம்மையார் முறையிட்ட பின்னர் பலரைச் சீடராக ஏற்றுக் கொண்டார்.

சுவாமி பிரமானந்தர் முதலில் தன்னிடம் வருவோரின்

மனத்தை அறிவார். அதன் பின் தக்கவாறு ஆறுதல் மொழிகள் தருவார். அவரிடம் சென்றவர்கள் சந்தேகம் தெளிவர். அதன்பின் ஆத்ம சாதனையில் ஈடுபடுவர். தமது சீடர்களைப் பலவித சாதனைகளில் ஆழச் செய்து அவர்களின் வளர்ச்சியை அவதானித்தார். பக்திப் பாடல்களைப் பாடப் பண்ணிச் சீடர்களைப் பக்தியில் ஈடுபடுத்தினார். சிலரைக் கடும் யோகத்தில் ஈடுபடச் செய்தார். ஒவ்வொருவரையும் ஒவ்வொரு மார்க்கத்திலும் பழக்கிப் பல மார்க்கத்திலும் வல்லவராக்கினார்.

ஒருமுறை சீடரொருவர் 'எங்கள் வேலை நிமித்தமாகத் தியானம் செய்ய நேரமில்லை' என்று முறையிட்டார். 'உன் எண்ணத்தை நினைத்து நீ வெட்கம் அடைய வேண்டும்; நீங்கள் சந்நியாசிகள்; கடும் வேலைகளைப் பற்றி முறையிடக் கூடாது. உங்கள் தியானத்தைக் கட்டுப்படுத்துவது வேலைகள் அல்ல. ஓடும் மனமே தியானத்திற்குத் தடை. உங்கள் வாழ்வைச் சுவாமி விவேகானந்தருக்காகத் தியானம் செய்யுங்கள் என்றார்' சுவாமி பிரமானந்தர். சீடர்கள் யாரேனும் தியானத்திற் சோர்வு காட்டினால் அவர்களுக்கு ஊக்கமளிப்பார். ஒருமுறை சுவாமி விவேகானந்தருடைய சீடர் ஓர் இளைஞரை வேலை செய்யாததற்காகக் கண்டித்தார். இதைக் கண்ட சுவாமி பிரமானந்தர் 'இவருடைய சாதனைகள் எப்படி என்று விசாரியாமல், இவ்வாறு கண்டித்தல் சரியல்ல' என்றார்.

சந்நியாசிகளைப் பார்த்து 'துறவிகளாகிய நீங்கள் ஈஸ்வர சாதனையில் ஈடுபட வேண்டும். உங்கள் உள்ளத்தை ஈசனுக்கு அர்ப்பணம் செய்யாவிட்டால் உங்கள் வாழ்வு வீண்; உலக வாழ்வைப் பற்றி உள்ளத்தில் அதிருப்தி கொள்ள வேண்டும். ஈஸ்வர சாதனையில் எவ்வளவு காலம் கழிக்கிறீர்கள் என உங்களையே நீங்கள் வினவ வேண்டும். ஈஸ்வர சாதனையிற் கழிக்கும் காலம் வீண் போகாது என இவ்வாறு ஒவ்வொரு சீடர்களுக்கும் உபதேசிப்பார். அவரவருக்குத் தகுந்தவாறு வேலைகளையும், சாதனை முறைகளையும் அளித்தார். ஈஸ்வர சாதனையில் ஈடுபடுவதற்காகப் புவனேஸ்வரத்தில் ஓர் ஆச்சிரமம் கட்டத் திட்டமிட்டார்.

சென்னைக்கு மறுபடியும் வந்து, பின் வேலூர் ஆச்சிரமத்திற்குத் திரும்பினார். சில வேளைகளிற் பலராம் போஸின் மனையிலே தங்குவார்.



1922ம் ஆண்டு பேதி நோயாற் பாதிக்கப் பட்டார். இந்நோய் குணமடைய நீரிழிவினாற் பீடிக்கப் பட்டார். பலவிதமான சிகிச்சைகள் செய்யப் பட்டன. பயனளிக்கவில்லை. உடல்தான் வருத்த மடைந்தது. ஆயினும் உள்ளம் உயர்ந்த நிலையிலே சாந்தமாகவும் உறுதியாகவும் இருந்தது. சீடர்களை அழைப்பார்' ஆசீர்வதிப்பார். சுவாமி பிரமானந்தரின் இறுதிக் காலம் இது. பூத உடலை விட்டு வெளியேறப் போகிறார் என்பதை உணர்ந்த பல பக்தர்கள் மன வருத்த மடைந்தனர்.

ஸ்ரீ இராம கிருஷ்ணர் முன்னொரு நாள் தரிசனத்தில் 'பிரவாகித்து ஓடும் புனித கங்கையிற் பொலிவுடன் ஆயிரம் இதழ்களுள்ள அழகிய தாமரை மலர் சென்ற இடமெல்லாம் பிரகாசமாயின. அம் மலரின் ஒரு சிறுவன் பகவான் கிருஷ்ணரின் கையைப் பிடித்து நின்றான். இருக்கல் [சுவாமி பிரமானந்தர்] முதன் முதலில் ஸ்ரீ இராம கிருஷ்ணரைச் சந்தித்தபொழுது அச் சிறுவன்தான் இவர் என்பதைச் ஸ்ரீ இராம கிருஷ்ணர் உறுதியாக்கினார். இதை இருக்கல் அறிந்தால் தனது பூத உடலை விட்டு நீங்குவார் எனக் கருதி ஸ்ரீ இராம கிருஷ்ணர் அந்தரங்கமாக வைத்திருந்தார்.

சுவாமி பிரமானந்தருக்கு இது தெரிய வந்தது. சீடர்கள் அச்சமடைந்தார்கள். சுவாமி பிரமானந்தர் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்தார். 'பிள்ளைகளே! சோகம் தவிர்ப்பீர். கடவுளை நீங்கள் அடைவீர்கள். நான் உங்களுடன் இருப்பேன்' என்று கூறிக் கொண்டு 10–4–1922ல் மகா சமாதியடைந்தார்.

---

## கடவுள் உறைவிடம்

நன்றிருந்த யோகநீதி நண்ணுவார்கட் சிந்தையுட்
சென்றிருந்து தீவினைகள் தீர்த்த தேவ தேவனே!
குன்றிருந்து மாடநீடு பாடகத்தும் ஊரகத்தும்
நின்றிருந்து வெஃகணைக் கிடந்த தென்ன நீர்மையே?

- திருமழிசைப் பிரான்.

# சுத்தானந்த நூலகம்

கவியோகி மகரிஷி சுத்தானந்த பாரதியாரின் இலக்கியச் செல்வம் குவிந்து கிடக்கிறது. கவிதை, இசைப் பாடல், நாட்டியப் பாட்டு, நாட்டுப் பாட்டு, கலைச்சுவைப் பாடல், இயற்கையின்பப் பாடல், நாடகம், நாவல், கதைக் கட்டுரை, வேதாகம விளக்கம், யோகம், சமயம் ஆகிய துறைகளில் அவர் ஏராளமான நூல்களை ஆக்கியுள்ளார். அவற்றை முறையாக வெளியிடவே யோக சமாஜத்தில் சுத்தான்ந்த அச்சகமும், சுத்தானந்த நூலகமும் நிறுவியுள்ளோம். ஜூலை 15—முதல், மாதம் ஒரு நூல் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவரும். அவை உங்கள் வீட்டிற்கு அறிவுச் செல்வமாகும். ஒவ்வொரு நூலும் இரண்டு ரூபா விலை. ஆண்டிற்கு பன்னிரண்டு நூல்கள் வெளிவரும். சுத்தானந்த நூலகம், யோக சமாஜம், அடையாறு, சென்னை-20 என்ற விலாசத்திற்கு இருபத்து நான்கு ரூபா முன்பணமாக அனுப்பி, உங்கள் பெயரைப் பதிவு செய்து கொள்ளுங்கள்.

**அடுத்த மாதம் வரும் நூல்கள்**

**(1) கீதாயோகம்**

**(2) Voice of Tayumaner**

## சுத்தானந்த நூலகம்

**யோக சமாஜம்** **சென்னை—20.**

ஐயா,

சுந்தானந்த நூல்களுக்கு ஆண்டுக் கட்டணம் ரூபா 24 இத்துடன் அனுப்பியுள்ளேன். தாங்கள் மாதந்தோறும் வெளியிடும் தமிழ்/ஆங்கில நூல்களை அடியிற் கண்ட விலாசத்திற்கு அனுப்ப வேண்டுகிறேன்.

முகவரி;

பெயர்..........................................................

விலாசம்.......................................................

..........................................................



# உள்ளத்தில் கொய்த கனிகள்

(திருமதி. மதார் நாச்சியார்)

தியானத்தினால் மறுமலர்ச்சியடையாத மனிதன் மானிலத்தில் மகிழ்ச்சி காண முடியாது.

எல்லா நிலைகளிலும் எதிலும் பற்றாது ஏகாந்த வெளியினிலே ஐக்கியமாவதே ஆத்மீக வாழ்க்கை.

மனது ஓய்வாக இருக்கும் பொழுதுதான் தியானத்தின் மகிமையை நன்கு உணர முடியும்.

தெளிந்த அறிவோடும் மனமகிழ்ச்சியோடும் வாழ்வதில் தான் இன்பமும் இனிமையும் இருக்கிறது.

ஆசைகளின் வீச்சுக்கு ஏமாறும் மனிதன் ஏராளமான தொல்லைகளையும் சுமந்தாக வேண்டும்.

ஆசைகளைப் பூர்த்தி செய்யும் விஷயத்தில் அக்கரை காணும் மனம், அனுபவித்த பின்பு சோர்வு காண்பதும் அதன் இயல்பே.

மனம் ஐம்புல இச்சைகளில் சிக்குவதினால் தான் வாழ்க்கையில் அபாயம் ஏற்படுகிறது.

எண்ணற்ற எண்ண அலைகளுக்கு அடிமையாகும் மனிதன் அமைதி காண முடியாது.

அன்பு மயமாகி அறிவு பிரசாதத்துடன் அமைதிப் பூங்காவில் நுழைவதிலேதான் இன்பத்தின் சுகந்தத்தை நுகர முடியும்.

கணக்கற்ற காட்சிகளினால் கவரப்படாது மனங்கடந்த நிலையினிலே மகிழ்ச்சி பெறுவதின் மூலமே மானிட வாழ்க்கையின் மர்மத்தை உணர முடியும்.

கீழ்த்தர உணர்ச்சிகளில் மனது சம்பந்தப்படுவதினால் தான் பயமும் பலஹீனமும் உண்டாகிறது.

எண்ணங்கள் அசைவற்றிருந்தால்தான் வாழ்க்கையில் ஏற்படுகிற எண்ணற்ற பிரச்சினைகளுக்கு வழி காண முடியும்.

மாண்டுபோன ஆசைகள் மீண்டும் வளர்ந்தோங்க பின்னப்படும் கோட்டையே கற்பனை.

இதய சாந்தியில் இன்பங் காண்பவர்களே இறைவனின் அருள் கிடைத்தவர்கள்.

மாசுபடிந்த மனிதன் சக்தியைக் கொண்டு ஆத்மீக உலகிற்கு நுழைய முடியாது.

காணுகின்ற உலகம் உனது உள்ளத்தின் பிரதி பிம்பம்.

ஞான மயமாகவும் அருள்ஜோதியாகவும் நித்தியப் பொருளுடன் நிரந்தரமாக வாழ்வதே தியானம்.

உண்மையான இன்பம் தெளிவான தியானத்திலே அனுபவிக்கப்படும் பரவச நிலை.

மனிதன் பிறரை நம்பி வாழும் வரையில் அடிமைத்தனம் நிறைந்த குழப்ப வாழ்வுக்கு ஆளாக வேண்டியது தான்.

வாழ்வு வனப்புடன் வளர வேண்டுமானால் கலக்கிடும் ஆசைகளின் வடுக்கள் கரைய வேண்டும்.

நினைவுகளின் பின்னல்களை நீக்காத வரையில் நிரந்தரமான சாந்தியைக் காண முடியாது.

மனமற்ற மௌன நிலையில்தான் சம்பூர்ண சாந்தியைக் காண முடியும்.

மட்டரக இச்சைகளிலே ஈடுபடுபவனை இயற்கை நிச்சயமாக சரியான தண்டனை கொடுக்கும்.

பட்டுப் போன, பயனற்றுப்போன எண்ணங்களை ஞாபகத்தின் ஏணியிலே ஏற்றி மனத்திரைக்கு கொணர்ந்து மாயா ஜால வித்தைகள் செய்யும் கற்பனைக் கோட்டையைக் கடந்தால் தான் விடுதலை காண முடியும்.

வெவ்வேறு சூழ்நிலைகளுக்குத் தகுந்தாற் போல் நிலை தடுமாறிடும் சுபாவம் மனதிற்கு உண்டு. ஆகவே மனங்கடந்த துரிய நிலையில் சுகம் பெறு.

சிதைந்த உள்ளமும் சீரழிந்த உடலும், அறிவுத் துறையிலே ஆர்வம் காட்ட முடியாது.

சிந்தை கலங்காது திடமான தைரியத்துடன் சதா நிஷ்டையிலே சார்ந்திருப்பதே பிரச்சினைகளினின்றும் பிரிவதற்கு வழி.

அண்டமெல்லாம் அசைந்தாலும் அகம் மட்டும் அசையாது காப்பாற்றுவதே ஆத்மீகக் கடமை.

நினைவற்ற நிலையிலே நித்தமும் ஒய்வு பெறுவதே மகத்தான தவம்.

இன்ப துன்ப உணர்ச்சிகளுக்கு அப்பாலிருந்து கொள். அதுவே ஆத்மீகச் சுதந்தரம்.

தொல்லைகளும் சஞ்சலங்களும் தொடர்ச்சியாக வந்தாலும் சமநிலை தவறாது யாவற்றையும் தாங்கிக் கொள்வதே பொறுமை.



எல்லா நிலைகளிலும் ஏக வஸ்துவில் ஒன்றாகி இன்ப துன்பங்களினால் சலிக்காது வாழ்வதே நேர்மை.

எண்ணங்கள் யாவும் ஓய்ந்து ஒன்றுபட்ட உள்ளத்துடன் யாவற்றையும் உணர்வதே அறிவு.

சம திருஷ்டியோடு சாந்தமாக சகல நடவடிக்கைகளையும் குறைவில்லாது செய்வதே கர்ம யோகம்.

நிலையாக உள்ளது எதுவோ அதுவே யாவற்றிலும் கலந்தும் கடந்தும் இருக்கிறது. அதுவே உண்மைப் பொருள். மற்றது யாவும் பொய் வடிவங்கள்.

---


# தெய்வீக வாழ்க்கைச் சங்க

## வெள்ளி விழா மலர்

மூவர்ண அட்டையுடன் 45க்கு மேற்பட்ட ஆத்மீகக் கட்டுரைகளுடன் வெளிவந்துள்ளது. ஆத்மீகச் செல்வத்தை அனைவரும் அள்ளிப் பருக வேண்டும் என்ற ஒரே நோக்கத்திற்காக மலர் மிகக் குறைந்த விலையில் கொடுக்கப்படுகிறது.

மலரின் தனிப்பிரதி ஒன்று — 1.25 விலையாகும்
10 மலருக்குக் குறையாமல் எடுப்போருக்கு — 1.00 விலையாகும்
[தபாற் செலவு தனி]

10 மலருக்குக் குறையப் பெற விரும்புவோர் மலர் ஒன்றுக்கு 1.50 வீதம் முற்பணம் அனுப்பி வைத்தால் தபாற் பாசலில் மலர் அனுப்பி வைக்கப்படும்.

ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி - சிலோன்.

# வாழ்க்கையின் நோக்கம்

எட்டுக் கிரகங்களின் சேர்க்கையை முன்னிட்டு கோடம்பாக்கம் பலராம் பிள்ளை தோட்டத்திலுள்ள ஞானோதய ஆலயத்தில் ஸ்ரீ பரமஹம்ச ஓங்கார சுவாமிகளால் 2-2-1962ந் தேதி முதல் 10 நாட்களுக்கு மஹா யக்ஞமும் நிர்க்குண அர்ச்சனையும் நடத்தப்பட்டது. 11-2-1962ந் தேதி பத்தாம் நாள் ஸ்ரீ பரம ஹம்ச ஓம்கார சுவாமிகளாற் போதிக்கப்பட்ட ஞானோபதேசத்தின் சாராம்சம்;-

எட்டுக் கிரகங்களின் சேர்க்கையால் சிலருக்குக் கஷ்டங்கள் உண்டாகலாம். ஒன்பது கிரகங்களுக்காக ஒன்பது நாட்களும் அவைகளுக்கு ஆதாரமாயிருந்து, அவற்றை நடத்தி வைக்கும் பரிபூரண சக்தியாகிய கடவுளுக்கு ஒரு நாளும் ஆக பத்து நாட்களுக்கு மஹா யக்ஞமும் நிர்க்குண அர்ச்சனையும் நடத்தப்பட்டது. சாந்த சொரூபியாகிய பரமாத்மாவுக்கு இன்று செய்யப்பட்ட மஹா யக்ஞமும், நிர்க்குண அர்ச்சனையோடு கிரக தோஷ சாந்தி பூர்த்தியாய் விட்டது.

உலகெங்கும் மூன்று குணங்களும் பஞ்ச பூதங்களும் நவக்கிரக சக்தியும் நிறைந்திருக்கிறது. பரமாத்மாவின் பரிபூர்ண சக்தியில் இவை யாவும் அடங்கியிருக்கின்றன. உலகெங்கும் சூரிய சந்திர நட்சத்திர மண்டலங்களிலும் மற்றெங்கும் நிறைந்திருக்கிறது பரமாத்மனின் பரிபூரண சக்தி. இவைகளுக்கு ஆதாரமாயும் இவைகளில் நிறைந்தும் இவைகளைக் கடந்தும் இருக்கிற அந்தக் கடவுள் யாவத் உள்ளத்திலும் இருக்கிறார் என்பதை நீங்கள் சதா ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். கிரக தோஷத்தினால் சில சமயம் பொறுமை, கோபம், பகை முதலிய தீய குணங்கள் உண்டாகும். இவற்றைக் கடந்து சாந்த சொரூபியாகிய உங்கள் உள்ளேயே பரம் பொருளை அடைந்தால் கிரக தோஷங்கள் உங்களை ஒன்றும் செய்யாது. எப்பொழுதும் மனச் சாந்தியுடன் சச்சிதானந்த நிலையில் இருக்கலாம்.

குடும்ப வாழ்க்கையை நடத்திக்கொண்டு இந்த நிலையை அடைதல் கூடுமா என்று சிலர் சந்தேகப் படலாம். தங்கள் பகுத்தறிவை உபயோகித்துப் பார்த்தால் உண்மை விளங்கும். இந்தச் சந்தேகம் உங்களை விட்டு நீங்கும். தாமரையிலையில் மேல் தண்ணீர் இருக்கிறது. ஆனால் அதில் அது ஒட்டுவது கிடையாது. அதுபோல் குடும்பத்திலிருந்து கொண்டே நீங்களும் அந்த நிலையை அடைந்து பற்றற்ற வாழ்க்கையை நடாத்தலாம்.

ஒருவன் விலையுயர்ந்த ஆடையை உடுத்திக் கொண்டிருக்கும்போது



மலிவான ஆடையை அணிந்திருப்பவர்களை விட தான் உயர்ந்தவன் என்று நினைக்கிறான். தன்னை விட விலை உயர்ந்த ஆடையை உடுத்திக் கொண்டிருப்பவர்களைப் பார்த்து தான் அவர்களை விடத் தான் தாழ்ந்தவன் என்ற தாழ்வு மனப்பான்மை கொள்கிறான். இதே போல் நகை அணிவதிலும், புடைவை முதலியன உடுத்திக் கொள்வதிலும் பெண்கள் வித்தியாசம் பாராட்டுகிறார்கள். பணக்காரர் ஏழை என்ற வேற்றுமை உண்டாக்குகிறார்கள். பகுத்தறிவை உபயோகித்தால் ஆடை ஆபரணங்களுக்கு ஆதாரம் என்பது நன்கு விளங்கும். உடம்பு இல்லா விட்டால் ஆடையாபரணங்கள் இருக்க இடம் இல்லை. உடம்பைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது ஆடை ஆபரணங்கள் பற்றிய நினைவு அவைகளால் உண்டாகும் வித்தியாசம் தோன்றுவதில்லை. உடம்பிற்கு ஆதாரம் உங்கள் உள்ளேயே உள்ள சச்சிதானந்த சொரூபமாகிய ஆத்மா என்பதை அறிதல் வேண்டும். மனம் ஆத்மாவைப் பற்றி நினைத்துக் கொண்டிருக்கும் பொழுது உடம்பைப் பற்றிய எண்ணம் உண்டாவதில்லை. உடம்பு ஆடைக்குச் சமானம் என்பதை நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டும்.

சிலருக்கு சில சமயம் காரணமின்றி அதிக கோபம் வரும். காரணமின்றியும் சிறிய விஷயத்திற்காகவும் புருஷன், மனைவியர் அடிக்கடி சண்டையிட்டுக் கொள்வார்கள். உண்மையை அறிந்தால் இம் மாதிரியான கோபங்கள் உண்டாகாது. கோபத்திற்குக் காரணம் மனம். ஆத்மாவிற்குக் கை கால்களில்லை. ரூபம் இல்லை. மரணம் இல்லை. ஜென்மம் இல்லை. சுக துக்கம் இல்லை. விருப்பு வெறுப்புமில்லை. முக் குணங்களும் பஞ்ச பூதங்களும் நவக்கிரக சக்திகளும் அந்த பரிபூரண சக்தியாகிய பரப்பிரம்மம் எங்கும் நிறைந்ததும் எல்லாவற்றிற்கும் ஆதாரமாயும் எல்லாவற்றையும் கடந்தும் இருக்கிறது அதே சக்தி யாவர் உள்ளத்திலும் இருக்கிறது.

வீதியில் நடக்கும் பொழுதும் ஆபீசில் இருக்கும் பொழுதும்' மற்ற ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டிருக்கும் பொழுதும் சிலருக்குச் சில சமயம் உடல் மட்டும் அங்கிருக்கும். ஆனால் நினைவு அங்கிருப்பதில்லை. நினைவு குடும்பத்தின் மீதோ அல்லது குழந்தைகள்மீதோ இருக்கும். அப்பொழுது உடம்பைப் பற்றிய ஞாபகமே இல்லை. அது போல் நினைவு ஆத்மாவின் மீது இருக்கும் பொழுது உடம்பின் மீது பற்று அல்லது பந்தமில்லாமல் செய்து கொள்ளலாம். சிலருக்கு மனதில் அமைதி அல்லது சாந்தம் இருப்பதில்லை. காரணம் மனம் நோயுற்றிருக்கிறது. இந்த நோய்க்குக் காரணம் சாந்த சொரூபியாகிய ஆத்மாவை மறந்திருத்தல்தான். 'ஜபம்' என்ற மருந்தை அளித்தால் அந்த நோய் தானாக நீங்கி விடும். ஜபத்தின் மூலம் கடவுளை சதா தியானித்து வந்தால் சாந்தம் உண்

டாகும். கடவுள் சுக துக்கங்களைக் கடந்திருக்கிறார். அவருக்கு இன்பம் துன்பம் என்பதில்லை. சாந்த சொரூபியாக சச்சிதானந்த மயமாக எப்போதும் இருக்கிறார். மனத்தைத் தியானத்தின் மூலம் ஆத்மாவில் ஐக்கியம் செய்து சச்சிதானந்த நிலையை நீங்களும் அடையலாம். ஆரம்பத்தில் பழக்கத்திற்குக் கொண்டு வரும் பொழுது சிறிது கடினமாக இருக்கும். கடவுள் மீது முழு நம்பிக்கையுடனும் சிரத்தையுடனும் விவேக வைராக்கியத்துடனும் தினம் சிறிது சிறிது நேரம் (ஒரு நிமிஷம்) நினைத்தாலும் பழக்கத்திற்குக் கொண்டு வரலாம். பழக்கத்திற்குக் கொண்டு வர வர, நேரம் அதிகம் ஆக ஆக விவரிக்க முடியாத ஆனந்தமும் சாந்தமும் உண்டாகும். பழக்கத்திற்குக் கொண்டு வர விடா முயற்சி செய்யுங்கள். செய்தித்தாள் முதலில் படிக்க ஆரம்பிப்பவர்களுக்குச் சிறிது கடினமாக இருக்கும். கொஞ்சக் காலம் படித்துப் பழகி விட்ட பிறகு ஒரு நாளைக்குச் செய்தித் தாள் படிக்கா விட்டாலும் அவர்களுக்கு ஒன்றுமே நன்றாக இருக்காது. அது போலவே தியானம் செய்வதைப் பழக்கத்திற்குக் கொண்டு வந்து விட்ட பிறகு தியானம் ஒரு நாளைக்குச் செய்யாமலிருந்தாலும் நன்றாக இருக்காது.

கோயில் திருவிழா காலங்களில் சுவாமி விக்கிரகங்களுக்குப் பெரிய பெரிய அழகிய மலர் மாலையைச் சூட்டி அழகு செய்வதை நீங்கள் பார்த்திருப்பீர்கள். பெரிய மலர் மாலை மிகவும் அழகாக இருக்கிறது. அப்பொழுது உள்ளத்தில் ஒருவித மகிழ்ச்சி உண்டாகிறது. மாலைக்கு ஆதாரம் நார். நார் இல்லாமல் அழகிய மலர் மாலையைப் பெற முடியாது. மாலையிலுள்ள பல வர்ண மலர்களைப் போன்று இந்த மக்களும் ஜீவராசிகளும் மற்றவைகளும் இருக்கின்றன. மலர் மாலைக்கு நார் ஆதாரமாய் இருப்பது போன்று இந்த உலகத்திற்காதாரமாய் சூத்திர தாரியாக இருந்து நடத்தி வைப்பவர் கடவுள் என்பதை நீங்களும் சதா கவனத்தில் கொள்ளல் வேண்டும். மலர் ஒரு நாளைக்குப் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கிறது. உள்ளத்தில் ஒரு வித களிப்பு உண்டாக்குகிறது. அந்த மலரே மறுநாள் வாடியிருக்கிறது. அழகாகவும் இல்லை. மகிழ்ச்சியாகவும் இல்லை. மனிதர்களும் இந்த மலரைப் போன்றவர்களே. இள வயதில் அழகாக இருக்கிறார்கள். அவர்கள் உள்ளத்தில் குதூகலம் குடி கொண்டிருக்கின்றது. முதுமையை அடைந்து விட்ட பிறகு ஐம்பது அல்லது அறுபது வயதிற்குப் பிறகு இளமையில் இருந்த அந்த அழகு இருப்பதில்லை. அவர்கள் உள்ளத்திலும் இள வயதில் இருந்த குதூகல உணர்ச்சியும் களிப்பும் இருப்பதில்லை. உடல் சம்பந்தான இன்பம் இள வயதில் இருந்ததைப் போல முதுமையில் இருப்பதில்லை. அவை யாவும் வயதாக வயதாகப் படிப்படியாகஅவர்களை விட்டு நீங்கி விடுகிறது. இள வயதினால் உண்டாகும் இன்பம் சாசுவதமானதில்லை நிலையாக இருப்பதில்லை. அழியுந் தன்மை வாய்ந்தது. ஆனால் ஆத்மா



வில் மனம் ஐக்கியமாகும் பொழுது உண்டாகும் இன்பம் அழிவற்றது. சாசுவதமானது. அது பேரின்பம் அல்லது பேரானந்தம் அல்லது பரமானந்தமாகும். ஆகையால் மனதை ஜப சாதனையின் மூலம் பரமாத்மாவில் ஐக்கியம் செய்து பரமானந்த நிலையை அடைய இன்றே முயலுங்கள்.

இயந்திரம் செயல் செய்கிறது. இயந்திரத்திற்குக் கர்த்தா மனிதன். மனிதனின்றி இயந்திரத்தை இயக்க முடியாது. அது போலவே சரீரங்கள் எல்லாம் ஆண்டவனால் இயக்கப்படும் இயந்திரங்களே. உடம்பை இயந்திரத்திற்குச் சமமாக நினைக்க வேண்டும். ஒரு இயந்திரத்தை அழகு படுத்தி விட்டு ஆனந்தம் அடைந்தால் போதுமா? அந்த இயந்திரத்தின் செயல்தான் நமக்கு முக்கியம். அதன் அழகு மட்டும் முக்கியம் அல்ல. அது போலவே ஆண்டவனின் இயந்திரமாகிய இந்த உடலை உயர்ந்த ஆடை ஆபரணத்தால் ஆடம்பர அழகு செய்து விட்டால் மட்டும் போதுமா?

இது அஞ்ஞானததால் உண்டாகும்செயல். உங்கள் பகுத்தறிவை(விவேகத்தை) உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை உங்களுக்கு நன்றாகப் புரியும். இராணி. வேலைக்காரி, இராஜா, வேலைக்காரன், ஆபீஸர், பியூன், ஏழை, பணக்காரன் என்ற வித்தியாசம் முக்கியம் இல்லை. ஒவ்வொருவர் செய்யும் செயல்தான் முக்கியம் என்பதை நீங்கள் நன்றாக அறிதல் வேண்டும். செயலன்றி மற்ற வித்தியாசங்கள் அஞ்ஞானம் அல்லது அவிவேகத்தால் தோன்றியவை. சாந்த சொரூபியாகிய கடவுள் மக்கள் மற்ற எல்லா ஜீவராசிகள் மூலமாகவும் உலக நன்மைக்காகவும் முன்னேற்றத்திற்காகவும் உலக சாந்திக்காகவும் செயல் புரிகிறார் என்பதை நீங்கள் அறிந்து உங்கள் கடமையை உணர்ந்து செய்ய முயற்சிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் உண்டாகும் மஹாத்மா காந்தியின் வாழ்க்கையைக் கூர்ந்து கவனித்தால் இதன் உண்மை உங்களுக்கு இன்னும் நன்றாகப் புலப்படும். காந்தியடிகள் ஒரு சமயம் இலண்டன் மாநகரத்திற்குச் சென்ற பொழுதும் சாதாரணமாக இங்கு உடுத்திக் கொண்டிருக்கும் எளிய உடையைத்தான் உடுத்திக் கொண்டிருந்தார். அவர் சாதாரண மனிதர்களால் சாதிக்க முடியாத அரும் பெரும் காரியங்களைச் செய்திருக்கிறார். பாரதநாடு விடுதலை அடைய அரும் பாடு பட்டிருக்கிறார். இதற்குக் காரணம் அவர் அணிந்துள்ள எளிய உடை அல்ல. அவர் கடவுளைப் பரிபூரணமாக நம்பினார். யாவர் உள்ளத்தும் ஆண்டவன் இருக்கிறார் என்ற உண்மையை அறிந்தார். மக்களுக்குச் சேவை செய்தார். மக்களின் நல் வாழ்விற்காக அரும்பாடு பட்டார். உண்மையை அடிப்படையாகக் கொண்ட தூய எளிய வாழ்க்கையை நடாத்தி வந்தார். கடவுளைப் பிரார்த்தனையின் மூலம் வழிபட்டார். சதா கடவுளைத் தியானம் செய்து கொண்டு தன் கடமையைச் செய்து வந்தார். தெய்வீக சக்தியை வெளிப் படுத்த உடுக்கும் உடையின் தரா

தரம் முக்கியம் இல்லை என்பது இப்பொழுது உங்களுக்கு நன்றாகப் புலப்படும். ஆகையால் ஆடை ஆபரணங்களால் ஆடம்பரம் செய்வதை விட ஆண்டவனை அதிகம் தியானம் செய்வதின் மூலம் அதிகம் பலனை அடையலாம். ஆத்மீக வாழ்க்கையில் முன்னேற்றமடைய சிரத்தை மிகவும் அவசியம். ஒரு சினிமா பார்க்க வேண்டுமானால் எவ்வளவு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. ஒரு கல்யாணம் செய்ய வேண்டுமென்றால் எவ்வளவு ஏற்பாடுகள் செய்ய வேண்டியிருக்கிறது. சிரத்தை யில்லாமல் எந்தக் காரியத்தையும் சாதிக்க முடியாது. பரிபூரண நம்பிக்கையைக் கடவுள் மீது கொண்டிருப்பதோடு சிரத்தையும் இடைவிடாத பக்தியும் இருந்தால் விரைவில் பலனடையலாம்.

தியானம் செய்யும் பொழுது எல்லாம் கடவுளால்தான் செய்யப்படுகிறது. எல்லாவற்றையும் தோற்றுவித்து காத்து இரட்சிப்பவர் கடவுள்தான் என்று சிந்தித்தல் வேண்டும். எந்த ரூபத்தில் வணங்கினாலும் கடவுள் ஒருவர்தான் என்றுநினைத்தல் வேண்டும். கடவுளின் ஒரு ரூபத்தை வணங்கும் பக்தன் மற்றொரு ரூபத்தை வணங்கி வரும் பக்தனுடன் பேதம் பாராட்டக் கூடாது. பகுத்தறிவை உபயோகித்து கடவுள் ஒன்றுதான் என்ற முடிவுக்கு வர வேண்டும். இனிப்பு (மிட்டாய்) பண்டங்கள் பல பெயர் கொண்டு அழைக்கப்பட்ட போதிலும் இனிப்பு ஒன்றுதான். அதுபோல் கடவுளை எந்த நாமத்தில் தியானம் செய்தாலும் கிடைக்கும் ஆனந்தம் ஒன்றுதான். கடவுளைப் பல ரூபத்தில் வணங்குவதால் கிடைக்கும் ஆனந்தத்தில் வித்தியாசம் கிடையாது. ஆகையால் ஒரு ரூபத்தில் கடவுளை வணங்குகிறவர் உயர்ந்த பக்தர் இன்னொரு ரூபத்தில் வணங்குபவர் தாழ்ந்த பக்தர் என்று பேதம் பாராட்டுதல் கூடாது. கடவுள் நாமத்தின் மூலம் மனதைக் கடவுளுடன் ஐக்கியமாக்க முயற்சிக்க வேண்டும். தியானம் செய்யும் நேரத்தை தினம் ஒரு நிமிஷத்திலிருந்து 5 நிமிஷங்கள் 10 நிமிஷங்கள் 15 நிமிஷங்களென்று நேரத்தை அதிகமாக்கிக் கொண்டே போக வேண்டும். 'கடவுளுடன் ஐக்கியம் அடைந்தே தீர வேண்டும்' என்ற ஆர்வத்துடனும் வைராக்கியத்துடனும் தியானம் செய்ய வேண்டும். தியானம் செய்யும் பொழுது தெய்வீக எண்ணங்கள் உண்டாகும். அந்த எண்ணங்களை நடைமுறையில் பின்பற்ற முயல வேண்டும். தியானம் செய்யும் நேரத்தை அதிகப்படுத்தினால் அவை தானாகவே பூர்த்தியாய் விடும். தியானம் பூர்த்தியானால் யோகம் உண்டாகும். ஜீவாத்மா பரமாத்மாவோடு ஐக்கியமாதலே யோகம் அல்லது சமாதி நிலையெனப்படும். இந்த நிலையை அடைந்த பிறகு எந்தச் செயல் செய்தாலும் அவைகளில் பற்றுஇராது. வீட்டில் பிள்ளைகள் பணம் முதலியவற்றின் மீது பந்தம் ஏற்படாது. அவைகளின் மூலம் மமதை அல்லது அகங்காரம் உண்டா



காது. ஆனால் செயல் மட்டும் நடைபெறும். ஜனக மஹாராஜா குடும்பத்திலிருந்து கொண்டே இராஜ பரிபாலனம் செய்து வந்தார். ஆனால் எதன் மீதும் அவருக்குப் பற்றுக் கிடையாது. இதுதான் இரகசியம். யோகம் பூர்த்தியான உடன் அமிர்ததாரையைக் கண்டத்தின் மூலமாக அனுபவிக்கும்போது விவரிக்க முடியாத ஆனந்தம் உண்டாகும். பசி நினைவு கூட உண்டாகாது. அந்த ஆனந்தத்திலேயே இருக்கலாம். உயிர் வாழ்வதற்குச் சிறிது உணவு உட்கொண்டால் போதும். தாமரை யிலையில் தண்ணீர் இருந்த போதிலும் அதில் ஒட்டுவது கிடையாது. அது போல் அந்த நிலையை அடைந்தவர்கள் உலகில் செயல் செய்த போதிலும் அதனால் அவர்களுக்குப் பந்தம் ஏற்படுவதில்லை. இந் நிலைக்குத்தான் யோகம், மோட்சம், கைவல்யம், ஆத்ம சாட்சாத்காரம் என்று கூறுவார்கள். இந்த நிலையில் முக் குணங்களையும் பஞ்ச பூதங்களையும் அடக்கும் சக்தியுண்டாகும். இதுவே அமர நிலை. இந்த நிலையை அடைந்தவர்களின் உடம்புதான் அழியுமே ஒழிய அவர்களின் பெயர் இந்த உலகம் உள்ளவரையிருக்கும். ஜபம் செய்யும் பொழுது எண்ணற்ற எண்ணங்கள் தோன்றும். மனமே கோடானு கோடி எண்ணங்களாய் இருக்கிறது. ஜபம் செய்யச் செய்ய இந்த எண்ணங்கள் தானாக நசித்து விடும். பக்தி ஏற்பட்ட பிறகு ஜப சாதனையைத் தொடங்க வேண்டும். ஜப சாதனை பூர்த்தியாகும் தறுவாயில் தாரணம் உண்டாகும். தாரண நிலையில் ஏகாக்கிரக சித்தம் உண்டாகும். இதன் பிறகு தியானம் உண்டாகி பிறகு விகல்ப சமாதியும் கடைசியாக நிர்விகல்ப சமாதியும் அமையும். இந்த நிலையை அடைந்தவர்களுக்குப் பற்று ஒரு சிறிதும் இருக்காது. வாழ்க்கையின் நோக்கம் இந்த உயர்ந்த நிலையை அடைவதுதான். இந்த ஞான நிலையை அடைவதின் மூலம் உங்கள் உண்மையான கடமையை நீங்கள் பூர்த்தி செய்தவர்களாவீர்கள். அந்தர்முகமாக ஜபம் செய்தால் இந்த நிலையை வெகு விரைவில் அடையலாம். பெறுதற்கரிய சச்சிதானந்த நிலையில் சதா இருக்கலாம்.

பாரத மாதாவின் குரல்

ஓ! பிள்ளைகளே! பெண்களே! உங்கள் ஒழுக்க நிலையை உயர்த்துங்கள். மதம், கட்சி, ஆண், பெண், என்ற வேற்றுமை பாராட்டாதீர்கள். உண்மையாகவும், நன்றியுடையவர்களாகவும், நாணயத்துடனும் அன்புடனுடனும், ஒற்றுமையுடனும், சாந்தமாகவும் ஆத்மீக வாழ்க்கையை நடத்தி இந்திய முன்னேற்ற மடையச் செய்யுங்கள்.

உலக மாதாவின் குரல்

ஓ! இராஜாக்களே, இராணிகளே, ஜனாதிபதிகளே, பிரதம மந்திரிகளே உலகத்தில் எல்லா நாட்டிலுமுள்ள மற்றுமுள்ள அரசாங்க நிர்வாகிகளே, உலக மக்களின் ஆத்மீக வாழ்க்கையின் மூலாதாரத்தை

# தத்துவ விசாரணை

(செ. சேதுபதி)

## நாம் யார்?

1. சிவஞான வள்ளல், சித்தர்கள், சுவாமி சுத்தானந்த பாரதி அவர்களால் கூறப்பட்டபடி எமது சரீரம் ஓர் நடமாடும் ஆலயம். மனச்சாட்சி, மனம், புத்தி, சித்தம், அகங்காரம் முறையே லிங்கம், சக்தி, நடேசர், விநாயகர், சுப்ரமணியரின் அம்சங்கள். இவைகள் முறையே விண்ணுலகமும் மண்ணுலகமும் சேர்ந்த அஷ்டலிங்கமான பரம்பொருளையும், சந்திரர், சூரியர், சனி, செவ்வாய்க் கிரகங்களையும் குறிப்பிடுகின்றன. துருவன் சப்த ரிஷிகள் போன்று எமது உயிரும் ஒரு நட்சத்திரம். (உதாரணம்; மின்மினிப் பூச்சி) முக்குணங்கள், மூவாசைகளையுடைய ஆணவம் கன்மம், மாயை, என்ற மும் மலங்கள் எம்மையடுத்துக் கெடுக்கும் உட் பகைவர்கள் எனப் பங்குனி வைகாசி மாத ஆத்மஜோதியில் பிரசுரிக்கப் பட்டிருக்கின்றது.

2. இதை உணர்ந்த நாம் ஆலயத்திற்குச் சென்று நந்தீஸ்வரரின் விக்கிரகத்தின் அருகாமையில் நின்று எமது உயிரை நந்தீஸ்வரரைப் போன்ற அடியானாகப் பாவித்துத் தியானிக்கிறோம். மும் மலத்தைக் குறிப்பிடும் பசுவின் மலத்தைச் சுட்டெரிக்கப்பட்ட திருநீற்றை மூன்று விரல்களால் எடுத்து நாமும் மும்மலத்தைச் சுட்டெரித்தோமென நினைக்கிறோம்.

---

### முன் பக்கத் தொடர்ச்சி

நினையுங்கள். உணவு, உடை, தங்க வீடு இல்லாதவர்களுக்கு அவை கிடைக்கும்படி தகுந்த ஏற்பாடுகள் செய்யுங்கள். அனாத்மீகத்திலிருந்தும் பஞ்சம், வெள்ளம், அதர்மமான செய்கைகளிருந்தும் கொள்ளை, கொலை, கலகம், யுத்தம் முதலியவைகளிலிருந்தும் மக்களைக் காப்பாற்றி ஒவ்வொரு நாட்டினுடைய இராஜ்ஜியத்திற்கும் பங்கம் ஏற்படாத முறையில் உலக மக்கள் வாழ்ந்து முன்னேற்றமடையச் செய்யுங்கள். உலகத்தில் மிகவும் சக்தி வாய்ந்த நாடானது தன்னுடைய சுய கௌரவத்திற்காகவும் புகழுக்காகவும், மதிப்பிற்காகவும் மற்ற நடுகாளை எப்பொழுதும் நேசித்து உதவ வேண்டும்.



3. விநாயகக் கடவுளைப் பின்பற்றி அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வமென உணர்ந்து எமது மனதைத் தாயாகவும், சக்தியாகவும், சந்திரனாகவும், பாவித்து மனதின் இருப்பிடமான நெஞ்சுக்கு முன்பு இரு கரங்களைக் குவித்து வணங்குகிறோம்.

4. புத்தியைத் தந்தையாகவும் சிவமாகவும் சூரியனாகவும் பாவித்து புத்தியின் இருப்பிடமான சிரசுக்கு முன்பு இரு கரங்களையும் குவித்து வணங்குகிறோம்.

5. மனச் சாட்சியைப் பரமான்மாவாகப் பாவித்துச் சிரசுக்கு மேல் இரு கரங்களையும் குவித்து வணங்குகிறோம்.

6. சூரியனைப் போன்று வெண்ணிறமான சந்தனத்தைத் தந்தையின் சுக்கிலம், புத்தி, சிவம், சூரியனைக் குறிப்பிடுவதாக நினைத்துப் புத்தியின் இருப்பிடமான நெற்றியிலணிகிறோம்.

7. சந்திரனைப் போன்று சிவப்பு நிறமான குங்குமத்தைத் தாயின் சுரோணிதம், மனம், சக்தி, சந்திரனைக் குறிப்பிடுவதாக நினைத்து மனதின் இருப்பிடமான நெஞ்சிலிடுகிறோம்.

8. பிண்டத்திலுள்ளவை அண்டத்திலுண்டு எனக் கூறப்படுவதால் புறத்திலுள்ள எமது தாய் தந்தையர்களையும் சூரிய சந்திரர்களையும் விண்ணும் மண்ணுலகமும் சேர்ந்த அண்டலிங்கத்தைப் பரம் பொருளாகப் பாவித்து வணங்குகிறோம்.

9. இராவணன் கும்ப கர்ணாதிகளைப் போன்று எமது அகத்திலும் புறத்திலும் கொடுங்கோலாட்சி புரியும் அசுர குணங்களை வீழ்த்தி பரமாத்ம ராமனின் செங்கோலாட்சியை ஸ்தாபித்து எம்மை இரட்சிக்கும்படி பரமாத்ம ராமனிடம் சரணடைந்து 'ஸ்ரீராம் ஜயராம் ஜெய ஜெயராம்' என்ற தாரக மந்திரம் பரமண்டல மந்திரங்கள் மூலம் மகாத்மாஜீயைப் பின்பற்றிப் பிரார்த்திக்கிறோம்.

10. முக் குணங்களின் கொடுங்கோ லாட்சிக்குட்பட்ட நாம் பரமாத்ம ராமனின் செங்கோலாட்சியை விரும்புவதினால் பிரகலாதன் கிறிஸ்து பிரான் மற்றும் தெய்வ பக்

தர்களைப் போன்று பலவித சோதனைகள் துன்பங்களுட் படுகிறோம்.

11. எமது வேண்டுகோளுக் கிரங்கி இவைகளைப் பொறுமையுடன் அனுபவிக்கக் கூடிய ஆத்ம சக்தியை பரமாத்மராமன் எமக்குக் கொடுத்தருள வேண்டுகின்றோம்.

12. மனிதனுக்கு மனிதன் பகைவனல்ல. முக் குணங்களே எமது பகைவர்களென்பதை நாம் நினைத்து முக்குணங்களின் கொடுங் கோலாட்சிக் குட்பட்டு எம்மைத் துன்புறுத்துபவர்களை மன்னிக்கும்படி பரமாத்மாவை வேண்டுகின்றோம். கிறிஸ்துபிரான், மகாத்மாஜீ போன்ற மகாத்மாக்கள் எமக்கு வழிகாட்டிகளாக இருக்கிறார்கள். இவர்களைப் பின்பற்றி நடப்போமாக!

---

## க ட வு ள்

கடவுள் என் தந்தையைப் போல ஸ்தூலமானவர் அல்லர், ஆயினும் எனக்குத் தந்தையினும் எல்லையற்ற அளவு இன்றியமையாதவர். என்னுடைய வாழ்வில் எத்துணைச் சிறிய விஷயத்தையும் இயக்கி வைப்பவர் அவரே. அவரன்றி ஓரணுவும் அசையாது என்பதை அப்படியே நம்புகிறேன்.

* * *

கடவுளும் கடவுள் சட்டமும் வேறல்ல, கடவுள் சட்டந்தான் கடவுள். நான் மனித ஜாதியில்ஒருவன் அதனால் மனித ஜாதியை விட்டு வேறெங்குங் கடவுளைக் காண முடியாது.

* * *

பரிபூரணமே கடவுடைய லட்சணம். ஆயினும் நாம் காண எத்துணைப் பெரிய ஜனநாயக வாதியாக உளன்! எத்துணைத் தீமையும் கபடமும் செய்யுமாறு நம்மை விட்டு வைத்துளன்! எல்லாவற்றிலும் உள்ளபனாயிருந்தும் இல்லையென்று கூறக்கூட நமக்கு அனுமதி தந்துளன்.

* * *

இயற்கையின் சட்டங்கள் மாறாதவை. மாற்ற முடியாதவை இயற்கைச் சட்டங்களை மீறியவை என்று கூறக் கூடிய அற்புதங்கள் இடையா.



# தத்துவமஸி உபதேசம்

(சாந்தோக்கிய உபநிஷத்தில் உத்தாலகர் சுபகேதுவிற்குபதேசிப்பது.)

சுழுப்தியின் உண்மையான இயல்பை என்னிடமிருந்து அறிந்து கொள்.

ஒரு மனிதன் தூங்குங் காலத்து அவன் தூய உள்பொருளோடு ஒன்றாகிறான்; தன் சொந்த ஆன்மாவை அடைந்திருக்கிறான்.

அவன் தன் சொந்த [ஸ்வ] த்தை அடைந்திருக்கிறான் [அபீதி] என்னும் காரணத்தினால் அவன் தூங்குகிறான் [ஸ்வாபீதி] என்று மக்கள் சொல்கிறார்கள்.

இவ் வெல்லாப் பிராணிகளும் தம்ஆதாரத்தை உள்பொருளில் வைத்திருக்கின்றன. அவை உள் பொருளில் வசிக்கின்றன. அவை உள் பொருளில் ஓய்வு எடுத்துக் கொள்ளுகின்றன.

ஒரு மனிதன் இங்கு இறக்கும் பொழுது அவனின் வாக்கு மனதிலும், மனம் பிராணனிலும், பிராணன் தேயுவிலும், தேயு உறுபல உயர் உள் பொருளிலும் (பரவஸ்துவிலும்) ஒடுங்குகின்றன.

யாது நுண்ணிய சத்தோ (யாவினதும் ஆதாரமோ) அதில் இருக்கும் யாவும் தம் ஆன்மாவை வைத்திருக்கின்றன. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ. ஓ சுவேத கேதுவே.!

தேனீக்கள் தூரத்திலுள்ள மரங்களின் இரசங்களைச் சேர்த்துப் பின்பு இரசத்தை ஒரு தன்மைத்தான திரவப் பொருளாய்ச் செய்து தேனாக்குகின்றன. மேலும் இவ் இரசங்களுக்கு "நான் இம்மரத்தில் அல்லது அம்மரத்தின் இரசம்" என்று சொல்லத் தக்கதாய் விவேகம் இல்லை. அதுபோலவே இவ்வெல்லாப் பிராணிகளும் உள் பொருளை அடைந்த பொழுது தாம் உள் பொருளை அடைந்திருப்பதாய் அறிவதில்லை. யாது யாவிலும் நுண்ணிய சத்தாய்

இருக்கிறதோ அதில் யாவும் இருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

சில நதிகள் கீழ்த்திசையை நோக்கிப் பாய்கின்றன. மற்றவை மேற்றிசையை நோக்கிப் பாய்கின்றன. அவை சமுத்திரத்துள் ஒன்றுகின்றன. அவை சமுத்திரமாகின்றன. சமுத்திரத்தில் அந்நதிகள் 'நான் இந்நதி அல்லது அந்நதி' என்றறிகிறதில்லை. அப்படியே இப் பிராணிகள் தாம் உள் பொருளிலிருந்து வந்தும் தாம் உண்மையிலிருந்து வந்ததாய் அறிகிறதில்லை. யாது யாவிலும் நுண்ணிய சத்தோ அதில் இருக்கும் யாவும் தன் இருப்பை வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

யாரோ ஒருவர் ஒரு மரத்தின் கிளையை வெட்டுவாராயின் அதன் இரசம் ஒழுகும். ஆனால் அது ஜீவித்திருக்கும் ஜீவாத்மாவினால் வியாபிக்கப்பட்டு அம்மரம் ஊட்டம் உறிஞ்சிக் கொண்டு மகிழ்ச்சியுடன் நிலைத்திருக்கிறது. ஆனால் அம் மரக் கிளைகளின் ஒன்றை உயிர் விட்டு விலகினால் அக்கிளை உலர்கிறது. மேலும் அது முழுமரத்தையும் விட்டு விலகினால் முழுமரமும் பட்டுப் போகின்றது. இவ்வாறே இவ் வுடலும் உயிர் விட்டுப் போன பொழுது இறக்கிறது. குடியிருக்கும் ஆன்மா இறப்பதில்லை. யாது யாவினும் நுண்ணிய சத்தாய் இருக்கிறதோ அதில் இருக்கும் யாவும் தன் இருப்பை வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

ஆலமரத்து விதையொன்றில் நீ காணாதிருக்கும் சத்து ஒரு பெரிய ஆலமரமாய் வளர்கிறது. இதே போல் யாது யாவினும் நுண்ணிய சத்தோ அதில் இருக்கும் யாவும் தன் இருப்பை வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

ஒரு குவளை தண்ணீரில் உப்பைச் சேர்த்தால் நீ அதனைக் காண்பதில்லை. அங்ஙனமாயினும் அது அங்கு இருக்கிறது. இப்படியே இவ்வுடலில் நீ சத்தை அல்லது தூய உள்பொருளை அறியாதிருந்தாலும் அது இருக்கிறது. யாது யாவிலும் நுண்ணிய சத்தோ அதில் இருக்கும் யாவும் தன் இருப்பை வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

கண்களைக் கட்டியவாறு ஒரு மனிதனை அவனின் சுவதேசத்திலிருந்து ஒரு வெளி நாட்டில் விட்டதாய்க் கருது. அவன் தான் அப்படியே கொண்டு வரப்பட்டதாய் உணர்கிறான். மேலும் ஒரு குறிப்பிட்ட திசையில் அவனின் சுவதேசம் இருப்பதாய் ஓர் இரக்கமுள்ள மனிதனால் அவனுக்குச் சொல்லப்படுகிறது. அவன் அத் திசையிற் புறப்பட்டுக் கிராமம் கிராமமாய் வினவிக் கொண்டு தன் வீட்டை அடைகிறான். இவ்வாறாக உண்மை நாடுவோன் குருவின் உதவியுடன் தன் இலக்கைக் குறிக்கொண்டு உண்மையை அடைகிறான். யாது யாவற்றிலும் நுண்ணிய சத்தோ அதில் இருக்கும் யாவும் தன் இருப்பை வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

ஆத்மஜோதி

ஒரு மனிதன் இறக்கும் பொழுது அவனின் உறவினர் அவனைச் சுற்றிக் கொண்டு 'என்னை அறிகிறாயோ' என்று கேட்கிறார்கள். அவன் அறிகிறான். ஆனால் அவனது வாக்கு மனதிலும், மனம் பிராணனிலும், பிராணன் தேயுவிலும், தேயு பரவஸ்துவிலும் அடங்கிய பொழுது அவன் அவர்களை அறிகிறானில்லை. யாது யாவற்றிலும் நுண்ணிய சத்தாய் இருக்கிறதோ அதில் இருக்கிற யாவும் தன் இருப்பை வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

ஒரு மனிதன் திருடியதாகக் குற்றம் சாட்டப்பட்டு ஒரு நீதிபதிக்கு முன் கொண்டு வரப் பட்டிருப்பதாய்க் கருது. பழுக்கக் காய்ச்சிய கோடரி அவனுக்கு முன்னால் பிடிக்கப்படுகிறது. அவன் அதைக் கைப்பற்றுகிறான். அவன் திருட்டைச் செய்திருந்து அதை மறுத்தானாகில் அவனது கை சுடப்படுகிறது. ஆனால் அவன் வாய்மையாளனாயிருந்தால் தகிக்கப் படுவதில்லை. எப்படி (வாய்மையுள்ள) அம் மனிதன் சுடப்படுகிறதில்லையோ அப்படியே இருக்கும் யாவும் அதைத் தன் ஆன்மாவாய் வைத்திருக்கிறது. அதுவே உண்மை. அதுவே ஆன்மா. அதுவே நீ.

இவ்வாறு போதிக்கப் பட்டதும் சுவகேது உண்மையை அறிந்தான்.

---

### வெற்றி

நீரைப் போல் மென்மையுடையது வேறு கிடையாது. ஆயினும் அதுவே கடினமானவற்றைக் கரைத்து விடும். அதுபே[illegible] வலியாரை வெல்வர். இதை எல்லோரும் அறிவதில்லை[illegible] ஆயினும் யாரும் பயில்வதில்லை.

— [illegible]வோ மதம்.

Registered at the G.P.O. as a Newspaper M. L. 59/300

## ஆத்மஜோதி நிலைய வெளியீடுகள்!

| | | |
|---|---|---|
| தெய்வீக வாழ்க்கைச் சங்க மலர் | | 1–25 |
| வழிபாடு | | –25 |
| திருமுறைக்காட்சி | (நா. முத்தையா) | 1–50 |
| கேதார் பத்திரி யாத்திரை | ,, | –75 |
| ஸ்ரீ கதிரைமணி மாலை | (பரமஹம்ச தாசன்) | –50 |
| அறிவுரைக் கதைகள் | (சுவாமி சிவானந்தர்) | –65 |
| இளங்கோவின் கனவு | (செ. நடராசன்) | 2–25 |
| நவராத்திரிப் பாடல் | | –25 |
| ஆத்ம நாதம் | (சுத்தானந்த பாரதியார்) | அச்சில் |

## சந்தா நேயர்களுக்கு.

அன்புடையீர்

இன்று 14-ஆம் ஆண்டுச்சோதி எட்டாவது சுடர் உங்கள் கையில் கிடைக்கின்றது. சந்தா இன்றுவரை அனுப்பாதோர் உடன் அனுப்பிவைத்துச் சோதியை ஆதரிக்க வேண்டுகின்றோம்.

**ஆத்மஜோதி நிலையம் - நாவலப்பிட்டி.**

(சிலோன்.)

இந்தியாவிலுள்ள அன்பர்கள் வழக்கம்போல் R. வீரசம்பு, சம்பு இண்டஸ்ரீஸ், அரிசிப்பாளையம், சேலம்–2. என்ற விலாசத்திற்கு அனுப்பிவைத்து, அதை எமக்கும் தெரி...ப்படுத்த வேண்டுகின்றோம்.

## வாய்வு சூரணம்

உஷ்ணவாய்வு, முழங்கால் வாய்வு, இடுப்பு வாய்வு மலக்கட்டு, மலபந்தம், அஜீர்ணம், கைகால்அசதி பிடிப்பு பசியின்மை, வயிற்று வலி, பித்தமயக்கம், பித்தசூலை, புளியேப்பம், நெஞ்சுக் கருப்பு, முதலிய வாய்வு ரோகங்களை நீக்கி ஜீரண சக்திக்கும் தேகாரோக்கியத்திற்கும் மிகச்சிறந்த சூரணம்.

தபால் செலவு உட்பட டின் ஒன்று 4ரூபா 25சதம்

[பத்தியமில்லை]

சம்பு இண்ட...ஸ் – அரிசிப் பாளையம்சேலம் 2 (S.I.)

இலங்கையில் கிடைக்குமிடம்:

...ன்கடை ஆத்மஜோதி நிலையம் – நாவலப்பிட்டி.

...லிர

Pri... ...ne' by Mr. N. Muthiah, Athmajothi Nilayam, N'pitiya at A... ...hi Pre... Nawalapitiya. (Ceylon) 14-6-62.